
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 24 வியாழக்கிழமை (07.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

# இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஐ.நா. செயலருக்கு ஜனாதிபதி அழைப்பு

## நிலைமையை நேரில் அவதானிக்க வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் மோதல்களில் சிக்குண்டுள்ள மக்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் கரிசனைகள் மற்றும் கவலைகள் அதிகரித்து வரும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை இலங்கைக்கு வந்து நிலைமைகளை அவதானிக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கிறார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ உணர்வாளர்கள் கொதிப்பு; சோனியாவின் பயணம் இரத்து

(புதுடில்லி)




இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் ஐந்தாம் கட்ட வாக்குப் பதிவுகள் எதிர்வரும் 13ஆம் திகதி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெறவுள்ள நிலையில் சென்னை மற்றும் புதுவையில் நேற்று தான் பங்கு பற்றுவதாக இருந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி இறுதி நேரத்தில் இரத்துச் செய்தார்.

சென்னைக் கூட்டத்தில் சோனியாகாந்தியும் தமிழக முதல்வர் கருணாநிதியும் இணைந்து பேசுவதற்கு ஏற்பாடு (12ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளர் இலங்கை வரத்தடை

(கொழும்பு)



அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (Human Rights Watch) ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கலாநிதி அனா நெய்ஸ்டற் இலங்கை வருவதற்கு அரசாங்கம் தடை விதித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல சிங்கள நாளேடான திவயின நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வவுனியா சென்ற இவர், அனைத்துலக (12ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டருக்கு எம்.பி. பதவி வழங்கக் கூடாது என்கிறார் கருணா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டு ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்காத தயா மாஸ்டருக்கோ அல்லது ஜோர்ஜ் மாஸ்டருக்கோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படக் கூடாது என அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த இருவருமே அரசியலில் பங்கு கொள்ளத் தகுதியற்றவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கிய போராளிகள் அல்லாத தயா மாஸ்டருக்கோ அல்லது ஜோர்ஜ் மாஸ்டருக்கோ அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மோதியதில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

வேலணை வங்களாவடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றுடன் மோதுண்டே இவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் வேலணை மேற்கைச் சேர்ந்த வே.சபாரட்ணம் (வயது 80) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனியார் வான் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் சம்மதத்துடனேயே செய்ம்மதிப் படங்கள் பெறப்பட்டன!

### ஐ.நா. தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பாக யுனோ சற் (UNO SAT) செய்மதி நிறுவனத்தினால் பெறப்பட்ட சர்ச்சைக்குரிய செய்மதி ஒளிப்படங்கள் அரசாங்கத்தினுடைய சம்மதத்துடனேயே பெற்றுக் கொள்ளப்பட்டது என அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு ஐ.நா. சபை தெரியப்படுத்தியிருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இவ்வாறு செய்ம்மதி மூலமாகப் பெறப்பட்ட தகவல்கள் இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை

### ரவி சங்கர் குருஜி தெரிவிப்பு



(சென்னை)

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாக வாழும் கலைப் பயிற்சி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரை மேற்கோள்காட்டி (12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் தொடர்பான கருத்துக்களை வெளியிட ஐ.தே.கவுக்குள் கட்டுப்பாடு

(கொழும்பு)

யுத்தம் தொடர்பான கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனது ஆலோசனையின்றி வெளியிடக் கூடாது என கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு பாலித்த ரங்கே பண்டார கோரவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்ற போது கட்சியின் பொருளாளர் டி.எம்.சுவாமிநாதன், வன்னி பாதுகாப்பு வலயத்தின் மீது கனரக ஆயுதங்களை பயன்படுத்தி. (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் நிலை பயங்கரமானது!

### டெஸ் பிறவுண் விபரிப்பு

(லண்டன்)

இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு வந்திருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரின் இலங்கை விஜயம் குறித்து பிரிட்டன் வெளியுறவு அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டெஸ் பிறவுண் தலைமையிலான 5 உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுவினர் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களிற்கு சென்று அங்குள்ள மக்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்கள் இருவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இருவேறு கிரிமினல் குற்றச்சாட்டுக்களின் பேரில் இருவேறு நீதிமன்றங்களினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரனா குணவர்த்தன, சிறார் கடத்தல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த

# மாணவர்கள் 59 பேரின் வதிவிடத்தை உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

2008/2009 பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த யாழ்.மாவட்டத்தை சேர்ந்த 59 மாணவர்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டியிருப்பதால்,வாக்காளர் இடாப்பின் 4 வருடங்களுக்கான (2004 -2007) பிரதிகளை அம் மாணவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார்.

இம் மாணவர்கள் தேர்தல் அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் மானியங்கள் ஆணைக்குழுவால் நேற்று முன்தினமே உரிய மாணவர்களின் தனிப்பட்டமுகவரிக்கு தபாலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அறிவுறுத்தப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு;

அன்ரன் மரியநாயகம் பிராங்கிளின் (அத்தியடி), ஆரணி பிரபாகரன் (உரும்பிராய் கிழக்கு),அருள் செல்வரத்தினம் மேரி கலிஸ்ரா (மத்தீயூஸ் வீதி),அருமைச் சந்திரன் மோகன் ராஜ் (கெருடாவில்), அருணாசலம் ஸ்ரீவவேதராஜ் வித்தியாசாகரர் (கந்தர்மடம்),பாலசுப்பிர மணியம் கார்த்தீபன் (பொலிகண்டி), சந்திரசேகரன் கபில்ராஜ் (மானிப்பாய்), டசிகா தேவராஜா (கொக்குவில் கிழக்கு),

ஞானசீலன் தர்சிகா (மருதடி வீதி), இந்திரநாதன் ஆதவன் ( நல்லூர் வடக்கு), ஜஸ்மின் சர்மிலி ஜேசுதாசன் (இளவாலை),ஜோசப் ஜோசப்பின் தர்சினி (உடுவில் தெற்கு), கலையரசி தர்மலிங்கம் ( கொடிகாமம்),கந்தசாமி விஜிகரன் (உரும்பிராய்), கிருஜ்ணபிள்ளை ஸ்ரீதரன் (நாகர் கோவில்), லூயிஸ் ஜஸ்மின் லக்ஸ்மலா (இளவாலை), மகேந்திரன் வாகீசன் (மானிப்பாய் வீதி),மதுரா நவரத்தினராஜா (சிறுப்பிட்டி வடக்கு), மோகனதாசன் சஜீதா (தொல்புரம் மேற்கு),

நிரோஜினி கணேசமூர்த்தி (உடுவில் மேற்கு), பாக்கியநாதர் யூலின் அனிற்றா (இளவாலை), பசுபதி சுதேஸ் (நீர்வேலி), பிரியதர்சினி மரியதாஸ் (மல்லாகம்), பொன்னுத்துரை யாழினி (நுணாவில் மத்தி), புஸ்பராஜா கார்த்திகா (கொக்குவில் மேற்கு), புவிதா விஜயகாந்தி (மாதகல்), இராஜமாணிக்கம் இராஜீந்திரன் (யாழ்ப்பாணம்),

இராஜதுரை ரமேஸ் (அச்சுவேலி தெற்கு), இராமநாதன் வித்யா (கொக்குவில் மேற்கு), ரமணி பொன்னையா (இமையாணன் மேற்கு), இராசேந்திரன் செல்வகுமார் (உடுவில் கிழக்கு), இரத்தினம் நிரூபகரன் (சூராவத்தை வடக்கு), ரத்தினம் வேல்சிவா (கெருடாவில் தெற்கு), சதாநேசன் இருதய யூலி (நெல்லியடி), செல்வராஜா பாமினி (தெல்லிப்பழை கிழக்கு), சிங்கராஜா அயந்தன் (தொல்புரம் கிழக்கு),

சிதம்பரநாதன் செந்தூரன் (தொல்புரம் மேற்கு), சிவகௌமினி சிவனேஸ்வரன் (சங்கரத்தை), சிவாஜினி சிவலிங்கம் (சுன்னாகம் மேற்கு), சிவகடாட்சம் ஸ்ரீபிரதாப் (நாவலர் வீதி),

சிவகுமார் சிவனேஸ்வரன் (மயிலந்தனை), சிவபாதம் சுவர்னன் (பொலிகண்டி), சிவபாதசுந்தரம் மீராஜினி (தலையாழி), தேவராஜா தவறூபன் (உடுவில்), தேவரஞ்சன் ஜொய்ஸ் வினோதினி (சிறுப்பிட்டி மேற்கு), தில்லைதிருச்சிற்றம்பலம் நிர்மலா(பிறவுண் வீதி),

தில்லையம்பலம் கஜேந்திரகுமார் (ஆனைக்கோட்டை மேற்கு),தோமஸ் அமலதாசன் லூர்ஜினி (அரியாலை), துரைராஜா பிரசாந்தன் (வாதரவத்தை),துரைசிங்கம் ரேணுகா (உடுவில் கிழக்கு), வல்லிபுரம் உஷாந்தன் (கம்பர்மலை), விஜயராசா விஜிதரன் (வல்வெட்டித்துறை),

யோகராஜா அமிர்தராஸ் (நுணா வில்), அருளானந்தம் கார்த்திகா(பண்டாரிக் குளம்), சாள்ஸ் விஜயரத்தினம் ஜெனிஸ் (மொறட்டுவ),கணேசலிங்கம் யோகேஸ்வரன் (பூந்தோட்டம்),செல்லத்துரை ஜசோதரன் (தாண்டிக்குளம்), தேவராசா தயாபரன் (மிரு சுவில்), விஜிதா சிவப்பிரகாசம் (வவுனியா).

(ச)

## 'நமக்காக நாம்' நிதிக்கு 400 மில். ரூபாய் அன்பளிப்பு

பயங்கரவாதத்திலிருந்து தாய் நாட்டை பாதுகாப்பதற்காக போராடி வரும் படை வீரர்களுக்கு உதவும் வகையில் பாதுகாப்பு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட நமக்காக நாம் நிதியத்துக்கு இதுவரை 400 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் விலிகமகே தெரிவித்தார்.

நமக்காக நாம் நிதியத்துக்கு அரசாங்க, தனியார் துறை, பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் போன்ற பலதரப்பட்டவர்களினதும் பங்களிப்பினாலேயே இத்தொகை சேகரிக்கப்பட்டது.

இத் தொகையை 900 மில்லியன் ரூபாய் வரை அதிகரிப்பதே அமைச்சின் நோக்கமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## விடுதலைப் புலிகளின் சிங்கள கலாசார நிலையம்

விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்த சிங்கள கலாசார மற்றும் மொழிப் பயிற்சி நிலையம் புதுக்குடியிருப்பின் கிழக்கே அடர்ந்த காட்டுப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

57ஆம் படையணியினர் மேற்கொண்ட தேடுதலின் போது இந்த மொழிப் பயிற்சி நிலையம் தொடர்பான பல விடயங்கள் தெரியவந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-5)

# தேசிய பாடசாலைகளில் பட்டதாரிகளை

# ஆசிரியர்களாக நியமிப்பதற்கான 4ஆம் சுற்று நேர்முகத் தேர்வு இன்று

## யாழில் 46 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான நான்காவது சுற்று நேர்முகப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இந் நேர்முகப்பரீட்சை இன்று யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 46 பட்டதாரி ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் கல்வி அமைச்சினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டார்.

இந் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு;

ஐ.அமல்ராஜ் (புலோலி தெற்கு),வி.சுதாகரன் (வட்டுக்கோட்டை),ரி.லின்ரூஸ் (யாழ்ப்பாணம்),ரி.தேவகி (பொலிகண்டி),எஸ்.பத்மநாதன் (யாழ்ப்பாணம்), எஸ். சண்முகராஜா (கொடிகாமம்),கே.கமலதாசன் (மானிப்பாய்), என்.விதுசன் (இளவாலை),வி. சசிகரன் (ஸ்கந் தபுரம்), சுரேசியா (சங்கானை),வி.கமலினி (அளவெட்டி), என். மோகன்ராஜு (திருக் கோவில்),எம். சுரேந்திரன் (வரணி),ரி. தர்சினி (கொக்குவில்), ஆர்.ராதிகா (கொடிகாமம்), ஜெ.நீலாம்பிகை (சுன்னாகம்), ஜெ.மணிமலர் (கோண்டாவில் கிழக்கு), ரி.சுகந்தினி (தாவடி வடக்கு), எஸ்.புவனகுமாரி (உடுப்பிட்டி), எஸ்.பிரதீபன் (சுன்னாகம்),

வி.யசோதரன் (உடுவில் தெற்கு), கே.வசந்தமாறன்( யாழ்ப்பாணம்),எஸ்.செல்வகுமார் (அச்சுவேலி),என்.யோகந்தி (நீராவியடி),ரி.எட்வேர்ட் (ஏழாலை),யு.யோகராஜா (புலோலி), கே.பாலசண்முகன் (கொக்குவில் கிழக்கு), எவ்.காயத்திரி (அச்சுவேலி),ஆர்.எல்.குணரட்ணம் (தாயகம்),

ரி.முகுந்தன் (நாவலடி), என்.சிவாணி (கந்தர்மடம்), ரி.சிவபாதசுந்தரம் (புலோலி மேற்கு), என்.ஜெயராஜா (புலோலி வடக்கு), என்.நவஜீபன் (மானிப்பாய்),எஸ்.சசிக் குமார் (ஏழாலை),கே.யோகன்ராஜ் (தாவடி தெற்கு), ரி.ஜீவந்தன் (மானிப்பாய்), ஆர்.ரமணன் (கோப்பாய்), எஸ்.தர்மதாசன் (உடுவில் தெற்கு),

எஸ்.நவநீசன் (கோண்டாவில் மேற்கு), ஏ.விஜயந்தனி (திருநெல்வேலி கிழக்கு), பி.உசாந்தினி (சுழிபுரம்),ரி.ரஜிதன் (எழுதுமட்டுவால் தெற்கு), பி.சுதர்சன் (அச்சுவேலி), வி.சிவந்தினி (சிவலிங்கப்புளியடி),ஆர்.எல். குணரத்தினம் (மானிப்பாய்).

(ச-5)

## யாழ். கல்வி வலய உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் உடற்பயிற்சிப் போட்டியில் பங்கு கொள்ளும் அனைத்து பாடசாலை அணிகளையும் உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் குமாரசாமி அறிவித்துள்ளார்.

(ச)

**ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களுக்கான அறிவித்தல்**

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் 14.04.2009 முதல் 05.05.2009 வரை ஸ்ரீ அம்மா பகவான் அருளிய அற்புத பிரசாதங்களான விபூதி,சந்தனம்,குங்குமம் பார்வையிடவும் பூசிக்கொள்வதற்கும் வருகைதந்த பக்தர்களுக்கு ஸ்ரீ அம்மா பகவான் அருட்கடாட்சம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பார்வையிடும் காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் புதிதாக வருபவர்கள் எமது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும் (060-221 7352).

சனிக்கிழமைகளில் பி.ப.3.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு அருட்தீட்சையைப் பெற்றுக் கொள்ளவும்.

05.05.2009இல் நேரடியாக வருகை தந்தவர்களுக்கும்,தவிர்க்க முடியாத காரணத்தினால் வருகைதர முடியாமையை தொலைபேசி மூலம் அறியத்தந்து நிகழ்வு சிறப்படைய வாழ்த்துச் செய்தி தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு. கே.கணேஷ் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,
ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க
ஆன்மீக பிரார்த்தனை மையம்,
சுழிபுரம்.

T.P:060 221 7352

(2707)

**விற்பனைக்கு**

சிடி,டிவிடி,வீடியோ கசட் மற்றும் வீடியோ கடைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் விற்பனைக்கு உள்ளது.

**விஜி வீடியோ**

இல. 1711 ,கடற்கரை வீதி,குருநகர்,
யாழ்ப்பாணம்.

(இ)

உ-வது அகவையில் கால் பதிக்கும் **பமிலி சுப்பர் ஸ்பொட்**



தனது வாடிக்கையாளர்களுக்கு மன நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பால்மா வகைகள், கேக் தயாரிக்கும் பொருட்கள், சொக்லட் வகைகள், பழ வகைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள், சோடா வகைகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.



**பமிலி சுப்பர் ஸ்பொட்**

சந்தை அருகாமை, மானிப்பாய். (விரைவில் ஓர் புதிய உதயம் பமிலி பார்மசி)

# இன்று ஒரு தகவல்

## அன்புள்ள அம்மா

ஜப்பானியரும் நம்மவரும் பேசிக் கொண்டிருந்தார்களாம். "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று ஜப்பானியர் கேட்டிருக்கிறார்.

"ஒரே ஒரு பெண்குழந்தைதான்" என்றார் இவர்.

"என்ன வயதிருக்கும்?"

"மூன்று வயது. பள்ளிக்கூடம் போயிருக்கிறா" என்றார் இவர்.

"என்ன... மூன்று வயதிலேயே பள்ளிக்கூடம் அனுப்புகிறீர்களா? எங்கள் ஊரிலெல்லாம் ஏழு அல்லது எட்டு வயதுக்கு மேல்தான் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவோம்" என்றாராம் அவர்.

இவருக்கோ ஆச்சரியம்! அவர் மேலும் விளக்கமாக கூறினார். குழந்தைகளின் மனம் பக்குவப்பட்ட பின்னர் தான் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவோம். அந்த வயதில் அவர்களுக்கே பள்ளிக்கூடம் போக வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும்.

ஏழு வயதுவரைக்கும் அந்தப் பிஞ்சு மனம் அன்பையும், நட்பையும், பிற மனித அறிமுகங்களையும் தான் அதிகமாக எதிர்பார்க்கும்.

ஒரு குழந்தை எவ்வளவு நேரம் அம்மாவுடன் இருக்கிறது. எவ்வளவு நேரம் வீட்டிலுள்ளவர்கள், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடன் செலவழிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்தக் குழந்தையின் மனம் விசாலமடைகிறதாம். அறிவில் அந்த வயதுக்கேற்ற முதிர்ச்சி ஏற்படுகிறது.

வீட்டிலிருக்கும் குழந்தை அந்த வயதில் தன் வீட்டைப் புரிந்து கொள்கிறது. வீட்டிலுள்ள மனிதர்களைப் புரிந்து கொள்கிறது. இன்னும் பல விடயங்களைப் புரிந்த கொள்கிறது.

இப்படியான சூழ்நிலை பள்ளிக்கூடத்தில் கிடைக்காது. அங்கே எல்லோரும் ஒரேமாதிரியாகத்தான் நடத்தப்படுகிறார்கள். ஒரு குழந்தைக்கென்று தனியாக கவனம் செலுத்துவது அங்கே சாத்தியமில்லை.

வீட்டிலிருக்கும் எல்லோரிடமும் சகஜமாகப் பழகக் கற்றுக் கொள்கிறது. வீட்டுச் சூழலை மறக்க வெளியே எங்கேயாவது போகலாம் என்கிற எண்ணமும் அதற்கு உண்டாகிறது.

புதிதாக பலபேரையும் பார்க்க வேண்டும். பழகவேண்டும் என்ற ஆசை உண்டாகும். இவையெல்லாம் அந்தக் குழந்தையின் ஏழுவயதுக்குள் ஏற்படும் மாற்றங்கள்.

இப்படி அந்தக் குழந்தை பக்குவம் அடைந்த பின்னர் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதுதான் முறை. அதை விட்டு விட்டு மென்மையான அதன் உணர்வுகளை சிதைத்து விடக்கூடாது. இவ்வளவும் அந்த ஜப்பானியர் கூறிய கருத்துக்கள். குழந்தை உளவியல் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

சின்னவயதில் தாயின் அரவணைப்பில் வளரும் குழந்தைகள் தான் பிற்காலத்தில் நல்ல நிலைமைக்கு வருகிறார்களாம்.

ஒரு குழந்தை நல்லபடியாக வளர வேண்டுமானால் நல்ல ஆகாரம் மட்டும் கொடுத்தால் போதாது. அன்பான அரவணைப்பு மிகவும் அவசியம்.

சில அநாதை ஆச்சிரமங்களில் நல்ல ஆகாரம் கொடுத்து வளர்க்கும் குழந்தைகள் கூட சரியாக வளர்வதில்லையாம். ஏனெனில் அந்தக் குழந்தைகளைத் தொட்டுச் சீராட்டி கொஞ்சிப் பேசுவதற்கு யாரும் இல்லாதது தான் குறை. அதனால் தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள்.

சின்னவயதில் குழந்தையை அன்பு அரவணைப்புடன் வளருங்கள். அவர்களை ஒரு பக்கம் விட்டுவிட்டு நீங்கள் ஒருபக்கம் போய் விடாதீர்கள். அப்படியானால் குழந்தை வேறுவிதமாகத்தான் இருக்கும்.

ஒரு குழந்தை,

"நானும் அப்பாவும் தினமும் ஹோட்டலில் தான் சாப்பிடுவோம்" என்றதாம்.

"ஏன் உங்கள் வீட்டில் அம்மா சமைப்பதில்லையா?" என்று கேட்டிருக்கிறார்கள்.

"எங்கள் வீட்டில் தினமும் எங்கள் அம்மா சமைக்கிறா. அதனால் தான் நாங்கள் ஹோட்டலில் சாப்பிடுகிறோம்" என்றதாம் அந்தக் குழந்தை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கரவெட்டி பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிபுகள்

தேசிய கலை இலக்கியப் பெருவிழா -2009 முன்னிட்டு வடமராட்சி தெற்கு, மேற்கு(கரவெட்டி) பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

ஜெ. ஜெசிந்தா–அறநெறிப் பாடசாலை, ரா.சிவபாதசுந்தரம்– விக்னேஸ்வராக் கல்லூரி, மு.சர்மிலா– விக்னேஸ்வராக் கல்லூரி.

**கட்டுரை சிரேஷ்ட பிரிவு**

ம. கௌசிகா– விக்னேஸ்வராக் கல்லூரி, த.தாட்சாயினி– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, செ.மோகனா– விக்கினேஸ்வராக் கல்லூரி.

**சிறுகதை கனிஷ்ட பிரிவு**

ஸ்ரீ கோபிகா– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பி. நிறோசா– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜெ. தசாந்தினி– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**சிறுகதை சிரேஷ்ட பிரிவு**

கோ. துஷாந்தினி– ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம இந்து அறநெறிப் பாடசாலை, ஜெ.உஷானி–உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, த. வினோ– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**சிறுகதை திறந்த பிரிவு**

பொ. சுகந்தன்– நெல்லியடி, கரவெட்டி,ஆர்.இந்திரா தேவி– வதிரி, கரவெட்டி, மூன்றாம்இடத்தை மூவர் பெற்றுள்ளனர். சி.சுந்தரலிங்கம்– வதிரி மேற்கு,கரவெட்டி, சி. ஜெயசங்கர்– துன்னாலை மத்தி, கரவெட்டி, எஸ். இரத்தினசேகரன்–அல்வாய், கரவெட்டி.

**கவிதை கனிஷ்ட பிரிவு**

க.வதனி– உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,மு.சர்மிளா– விக்னேஸ்வராக் கல்லூரி,பா.நிருபன்– இமையாணன் அ.த.க. வித்தியாலயம்.

**கவிதை சிரேஷ்ட பிரிவு**

சி.தர்சிகா– விக்கினேஸ்வராக் கல்லூரி, சி.மோகனரூபி– உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, சா.திவ்யா– உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி.

**கவிதை திறந்த பிரிவு**

க.பாலன்– இமையாணன், உடுப்பிட்டி, திருமதி .வ. பத்தினிப்பிள்ளை– துன்னாலை மத்தி ,கரவெட்டி ,மா.செல்வதாஸ்–இமையாணன் கிழக்கு , உடுப்பிட்டி.

**ஆங்கிலக் கவிதை திறந்த பிரிவு**

திருமதி.பகீரதி கலைச்செல்வன் – துன்னாலை, கரவெட்டி.

**பாடலாக்கப் போட்டி திறந்த பிரிவு**

க.ஸ்ரீரங்கநாதன்–நெல்லியடி ,கரவெட்டி,நா.ஆனந்தராணி– நெல்லியடி,கரவெட்டி, க.பாலன்–இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (ஓ)

# தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டி முடிபுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிற்கிடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசியபாடசாலை 1A,B,1C வகையான பாடசாலைகளிடையேயான போட்டியில் முறையே மீசாலை வீரசிங்கம், சாவ. இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு 1,2,3 ஆம் இடங்களையும் வகை II,III ஆகிய பாடசாலைகளிற்கிடையேயான போட்டிகளில் கச்சாய் அ.த.க. பாடசாலை 1ஆம் இடத்தையும் மிருசுவில் அ.த.க. பாடசாலை 2 ஆம் இடத்தையும் விடத்தற்பளை கமலாசினி 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஓ-29)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற் பூங்காவை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப. கிரிதரன் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், தொழில் பூங்காவின் தொழில் விடயங்களை சமாசத் தலைவர் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் அ. மகேந்திரன், நவீல்ட் பாடசாலை அதிபர் எஸ். மகேந்திரன், சிறுகைத் தொழில் பதில் பிரதிப் பணிப்பாளர் கே. ஜெயமனோன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இராசி பலன்

07.05.2009
சித்திரை 24, வியாழக்கிழமை
திரயோதசி முற்பகல் 09.30 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.02 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை
சுபநேரம் 7.25-8.55 மணிவரை
சித்திரைச் சித்திரை சித்தாமிர்தம்
அக்கினி நாள் ஆரம்பம்.

| | |
|---|---|
| மேடம் | அபூர்வ சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தனலாபம். |
| இடபம் | சுகவாழ்வு, சத்துருஜெயம், அதிக பிரயாசை, நல்ல செய்தி. |
| மிதுனம் | வியாபார விருத்தி, மனஸ்தாபம், முயற்சி தாமதம், அஜீரணக் கோளாறு. |
| கடகம் | பயந்த சுபாவம், புதிய விடயம், சுபசெலவு, போசன சுகம். |
| சிங்கம் | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, வாக்குமேன்மை, கீர்த்தி. |
| கன்னி | வேலைச்சுமை, கௌரவக்குறைவு, தனவிரயம், திடீர் நன்மை. |
| துலாம் | நண்பர்கள் உதவி, ஜனவசியம், ஆழ்ந்த சிந்தை, நல்லமுயற்சி. |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படல், திடீர் பயணம், முயற்சி தாமதம். |
| தனுசு | தொழில்சிந்தை, உறவினர் சந்திப்பு, காரியநன்மை, தனலாபம். |
| மகரம் | உற்சாகம், நல்லசெய்தி, முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி. |
| கும்பம் | சரீரபிரயாசை, பெரியோர் உதவி, திடீர் பயணம், அச்சமான நிலை. |
| மீனம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், உடல்நலக்குறைவு, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 140 |
| உருளைக்கிழங்கு | 120-140 | 150 | 130 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 50 |
| தக்காளி | 150 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 90 | 60 |
| கோவா | 20 | 30 | 30 |
| கரட் | 40 | 50 | 50 |
| பூசணி | 20 | 35 | 15-40 |
| புடோல் | -- | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 35 | 40-50 | 40-50 |
| பெரிய வெங்காயம் | -- | 120 | -- |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 75 | 90 | 60 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 70 | 90 | 70 |
| லீக்ஸ் | -- | 200 | 240 |
| போஞ்சி | - | - | - |
| பிற்றூட் | 20 | 35 | -- |
| கறிமிளகாய் | 80 | 90 | -- |
| கீரை – 1 பிடி | 25 | 25 | 30 |
| தேசிக்காய் | 100 | 110 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 20-30 |







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தடகளப் போட்டி நிகழ்வுகளையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கோபி)

## ஐம்பது சதவீதமானவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி

(நல்லூர்)

2008 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவர்கள் 29 பேரில் 15 பேர் க.பொ.த(உ/த) வகுப்பில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் விஞ்ஞானப் பிரிவிலும் ஏனையோர் வர்த்தக, கலைப்பிரிவுகளிலும் தமது கற்கையைத் தொடர்கின்றனர்.

சமயம்,விவசாயம்,சித்திரம் ஆகிய பாடங்களின் அடைவுமட்டம் 100% ஆகவும் தமிழ், சங்கீதம், நடனம் ஆகியவை 90% ஐ அண்மித்தும் காணப்படுகின்றன. இம்முறை விஞ்ஞானப் பாட அடைவு மட்டம் 8% ஆல் உயர்வடைந்துமுள்ளதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## பெரியபுராணக் கருத்தரங்கு

அகில இலங்கை இந்துமாமன்றம் நடாத்தும் பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்குத் தொடரின் நான்காவது அமர்வு இன்று காலை 9 மணிக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் கோவில் வீதியில் அமைந்துள்ள இந்துமாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## இரதோற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன . (ஓ)

## கணனிப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரிவினால் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சி பெற விரும்புவோர், தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ரி. ரசிச்சந்திரன் அறிவித்துள்ளார். பயிற்சி நெறிகள் யாவும் எதிர்வரும் 15 ஆம்திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஓ)

## இழந்த பாடசாலை நாட்களை ஈடுசெய்ய நடவடிக்கை

வடமராட்சி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இழந்த பாடசாலை நாட்களை ஈடு செய்ய முன்வந்துள்ளது. இதன் பிரகாரம் இம்மாதம் 23, 30 ஆம் திகதிகளில் ஜூன் மாதம் 06, 13 ஆம் திகதிகளில் பாடசாலைகள் நடைபெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட தினங்களில் சகல பாடசாலைகளும் தவறாது பதில் பாடசாலைகளை நடத்த வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-17)

## ஆங்கில தின வாய் மொழி போட்டி

நல்லூர் கோட்ட மட்ட ஆங்கில தின வாய்மொழி மூலமான போட்டிகள் நாளைமறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.வி. குணசேகரம் அறிவித்துள்ளார். (ஓ)

# நெல்லியடி இடைத்தங்கல் முகாமில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஏற்பாடு

(அல்வாய்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் இடைத் தங்கல் முகாமில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் இடைத்தங்கல் முகாமில் 6 ஆசிரியர்களும் 8 ஆசிரியைகளும் தற்போது இருக்கிறார்கள். இவர்களே இம் முகாமிலுள்ள 258 மாணவர்களுக்கும் கற்றல், கற்பித்தல் நட வடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இம்மாணவர்களுக்கான இலவச பாட நூல்கள் கரவெட்டி, பருத்தித்துறைக் கோட்டங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் தேவையான இலவச பாட நூல்களை ஏனைய கோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் நடவடிக்கை எடுத்துள்ளார். (ஓ-6-19)

# இலங்கை வங்கி கச்சேரிக் கிளையின் அகவை ஒன்றின் நிறைவு நாள் இன்று

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கி விரிவாக்கற் கிளை சர்வதேச வலைப் பின்னலுக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டதன் மூலம் யாழ். மாவட்ட செயலகத்தினுள்ளும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள அரச திணைக்களங்கள், பாடசாலைகள், வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள் துரித கதியில் செயலாற்றி வருகின்றது.

கணனி மயப்படுத்தப்பட்ட சேவையுடன் தங்க நகை அடைவுச் சேவையும் தற்பொழுது நடைபெற்று வருவதால் மாவட்ட செயலக சுற்று வட்டாரத்தில் இருக்கும் வாடிக்கையாளர்களின் கால தாமதம் மற்றும் பிரயாண அசௌகரியங்கள் உரிய முறையில் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் இவ் விரிவாக்கற் கிளையில் ஏனைய வங்கிக் கிளைகளில் நடைபெறும் சகல கொடுக்கல் வாங்கல்களையும் தற்பொழுது துரித கதியில் மேற்கொள்ள முடியும் என்றும் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## உலக செஞ்சிலுவை தினத்தையொட்டி கண்காட்சியும் கருத்தரங்கமும்

(குருநகர்)

யாழ் .மாவட்ட செஞ்சிலுவைச்சங்கத்தால் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு புற்று நோய் பற்றிய கண்காட்சியும் கருத்தரங்கமும் கலைத்தூது கலையக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ் வைப வத்தில் முதன்மை விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.தேவநேசன் சிறப்பு விருந்தினராக செஞ் சிலுவைச்சங் கப்பிரதிநிதி Elina Ajmone ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் மேற்படி தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஓவியப்போட்டி பரிசளிப்பு வைபவம் மாலை 2 மணிக்கு கண்டிவீதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச்சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு யாழ். மத்திய கல்லூரியில் அதிபர் ஐ.ஓங்காரமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஓ-39)

## அலங்கார உற்சவம்

மட்டுவில் மத்தி ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் இன்று காலை அபிஷேகமும் மாலை 4 மணிக்கு சுவாமி உள் வீதியுலா வருதலும் இடம்பெறும். ஏனைய தினங்களில் மாலை 3 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதியுலாவும் இடம் பெறும்.

இறுதி நாளாகிய 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு வசந்த மண்டப பூசையும் இடம்பெறும். (ஓ-6)

## சித்திரா பூரணை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி ஷேத்திரத்தில் நாளை வெள்ளிக்கிழமை சித்திராபூரணைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுட்டானங்களும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் காலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் அதைத் தொடர்ந்து விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை, கோபுர வாயிலில் தரிசனம் என்பன இடம் பெறும் காலை 8.15 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி, தீர்த்த மண்டபத்தில் அனுக்கிரகம், என்பன இடம்பெற்று காலை 10 மணிக்கு சுவாமி கோவிலுக்கு எழுந்தருளுவார்.

அத்துடன் தீர்த்தவாரி முடிவுற்ற பின் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரிதாஸ் – கியூடெக் நிறுவனத்தின் சுனாமி அனர்த்த திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் , தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 36 இளைஞர்களுக்கு சாரதி பயிற்சி வழங்கப்பட்டு அதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 11 மணிக்கு இளவாலை வடக்கு கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் வாழ்வாதார சுழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை மற்றும் இளவாளை வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 19 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா கடனுதவியும் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

# யாழ்.செய்திகள்

## பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி (B.Ed) கற்கைநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள ஆசிரியர்கள் 077 8696798 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளுமாறு பயிற்றப்பட்ட ஆசிரியர் பயிற்சி வட்ட இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு

அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கத்தில் (ACUET) இணைந்துகொள்வதற்காக விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மற்றும் தற்காலிக இணைப்பிலுள்ள சகல ஆங்கில ஆசிரியர்களும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் (யாழ். பெருமாள் கோவிலுக்கு முன்பாக) தங்களது விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து உதவுமாறு சங்கத் தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் சங்கத்தில் புதிதாக இணைய விரும்புபவர்களும் அன்றைய தினம் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்றும் விண்ணப்பப்படிவங்களை உடனடியாக கொழும்பு தலைமைச் செயலகத்துக்கு அனுப்ப வேண்டியிருப்பதனால் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ஓ)

## தென்மோடி , விசேடகூத்து போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் தமிழ்மொழித் தினம் 2009 ஐ முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த தென்மோடி, விசேட கூத்து ஆகிய போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாதெனவும், விண்ணப்பித்துள்ள பாடசாலைகள் பின்னர் அறிவிக்கும் தினத்தில் போட்டியில் கலந்துகொள்வதற்கேற்ப ஆயத்த நிலையில் இருக்குமாறும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## நீரிழிவு சிகிச்சை நிலையம் திறப்பு விழா வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இன்று காலை 7.30 மணிக்கு நீரிழிவு சிகிச்சை நிலைய திறப்பு விழா வைபவம் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த பேராசிரியர் செல்வி வசந்தா அரியரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

# பத்திரிகைச் சுதந்திரம்

## ஜனநாயகத்தின் செம்மைக்கு ஊடகமே உதவுகரம்

02

இன்று உலகின் நாலாபுறங்களினின்றும் ஏராளமான செய்திகளும் கருத்துக்களும் வந்த வண்ணமுள்ளன. அவற்றுள் அச்சில் வெளியிடத்தக்கவற்றைத் தேர்ந்தெடுப்பது பத்திரிகையாளரின் பொறுப்பு.

பலாபலன்களைக் கவனத்தில் எடுக்காது, வாசகர் பலவீனத்தைப் பயன்படுத்தி விற்பனையைப் பெருக்கவோ வேறு கருமங்களை முடிக்கவோ கருதலாமா? குரோத உணர்வுகளையும் வன்மத்தையும், உன்மத்தத்தையும் தூண்டும் வகையிலும் முக்கியமற்றவற்றைப் பூதாகரமாகக் காட்டும் விதத்திலும் முக்கியமான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பும் வகையிலும் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிடலாமா? யுத்த தளபாட வியாபாரத்தில் சுவை கண்ட ஒருவர் அதற்கு அனுகூலமான ஒரு நிலையினைத் தொடர்ந்து வைத்திருக்கப் பத்திரிகையைப் பயன்படுத்தினால் எப்படியிருக்கும்?

ஆடைகலைந்து கவர்ச்சி காட்டும் பெண்ணொருத்தி ஒருபுறத்திலும் கந்தலாடையால் மானத்தைக் காக்க முயலும் ஏழைப்பெண்ணொருத்தி மறுபுறத்திலும் காணப்படுகிறார்கள் என்றும், யாருடைய புகைப்படத்தைப் பிடித்துப் பத்திரிகையில் போடுவது என்றும் தீர்மானிக்கும் நிலையில் பத்திரிகையாளர்கள் நிற்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். விற்பனையைப் பெருக்க உதவும் என்று கவர்ச்சிப் பெண் படத்தை ஒருவர் விரும்பலாம். ஏழ்மையின் கொடுமையை எடுத்துக்காட்டிச் சமுதாயத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிடலாம் என்று ஏழைப் பெண் கோலத்தை இன்னொருவர் தேர்ந்தெடுக்கலாம். எதை வேண்டுமானாலும் எடுத்துக் காட்டும் சுதந்திரம் எங்களுக்கு உண்டென்று மற்றொருவர் மல்லிடலாம்.

உண்மைகளை வெளியிடுவது பத்திரிகையின் வேலை. தீர்மானங்களை மேற்கொள்வது வாசகர்களின் வேலை என்றும் கூறப்படுகிறது. உண்மை என்றால் என்ன என்ற வினாவுக்கு விடை காண்பது அவ்வளவு இலேசானதல்ல. "உண்மை சில வேளைகளில் தீமை விளைப்பதாகலாம்" என்று உலகப் பத்திரிகை அமைப்பொன்றின் செய்தித் துறைத் தலைவராக விளங்கிய ஜோர்ஜ் ஏ. கிறிம்ஸ்கி கூறுகிறார்.

மகாத்மா காந்தி Truth, Accuracy என்பவற்றை வேறுபடுத்தி, Truth என்பது சீர்தூக்கிப் பார்த்து முடிவுசெய்யப்பட வேண்டிய ஒன்று என்பர். வாய்மை என்றால் என்னவென்பதை வரையறை செய்யப் புகுந்த திருவள்ளுவர், 'யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்றார். குற்றமற்ற நன்மை பயக்கும் இடத்து பொய்மையும் வாய்மையின் பாற்படும் என்று அவர் அடுத்துக் கூறுகின்றார். "தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையாம்" என்று பரிமேலழகர் விளக்குகிறார். எனவே, உண்மையைப் பேணுவதில் ஆர்வம் உடையவர்கள் ஒரு செய்தியையோ வியாக்கியானத்தையோ படத்தையோ வெளியிடும்போது அதனால் விளையக்கூடியது நன்மையாகுமா தீமையாகுமா என்பதைப் பொறுப்புணர்வுடன் நிதானிக்கும் சுதந்திரமுடையவர்களாதல் வேண்டும். பல்வேறு செய்திகள் பல ஊடகங்களின் மூலம் மோதி முட்டும் இன்றைய சூழலில், அபிவிருத்தியடைந்துவரும் ஒருநாட்டின் சாதாரண மக்களிடம், உண்மையையும் பொய்யையும் நன்மையையும் தீமையையும் தீர்மானிக்கும் பொறுப்பினை முற்றுமுழுதாக விட்டுவிடுவது உசிதமானதா என்பதும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

அது எவ்வாறாயினும், வலுமிக்க ஒரு சாதனம் பத்திரிகை என்பதையும் பொது மக்களிடம் மிகுந்த செல்வாக்குச் செலுத்தக் கூடிய அதனைச் சீவனோபாயத்துக்காகவோ இலாபம் சம்பாதிக்கவோ கையாள்வதால் பல அனர்த்தங்கள் விளையலாம் என்பதையும் விளங்கிக் கொண்டு, பொதுநன்மைக்குக் குந்தகம் தோன்றா வகையில் அதனைப் பயன்படுத்த வேண்டும்.

இன்று பெருமளவு வேண்டப்படும் நிலையிலுள்ள மொழியாற்றலை வளர்ப்பது குறித்தும் பத்திரிகையாளர் கூடி கவனம் செலுத்துதல் நன்று. பல்வேறு விடயங்களைத் தெளிவான நடையில் தமிழுக்குக் கொண்டு வந்த மகாகவி பாரதி, திரு. வி.க, வ.ரா, கல்கி, ஏ.என். சிவராமன் முதலான பத்திரிகையாளர்கள் நினைவுகூரப்படலாம். மகாத்மா காந்தியின் பத்திரிகையெழுத்துக்களைப் பற்றிக் கூற வந்த புகழ்பூத்த ஒரு பத்திரிகையாளரான ஏ.எஸ். ஐயங்கார், "புதியதொரு சிந்தனை மட்டுமன்றிப் புதியதொரு மொழியும் புதினப் பத்திரிகையெழுத்திலே துலங்குகிறது" என்றார்.


பேராசிரியர் சி. தில்லைநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மக்கள் மத்தியில் அறியாமை, மூட நம்பிக்கை, பகைமை, அச்சம், சந்தேகம், அவநம்பிக்கை அதிகாரவெறி போன்றவற்றை ஒழிக்கவும், காலத்துக்கேற்ற அறிவையும் உலக நோக்கையும் விழுமியங்களையும் புரிந்துணர்வையும் வளர்க்கவும், பண்முகப் பாட்டின் பலத்தை உணர்த்தவும், அமைதி, நீதி, அடிப்படை உரிமைகள் முதலானவற்றின்பால் வேட்கையைப் பெருக்கவும், புதிய சிந்தனைகளையும் தொழில்நுட்பங்களையும் சிரமமின்றிப் பரிமாறத்தக்க கருவியாகத் தமிழ்மொழியை வளம்படுத்தவும் பத்திரிகைகளால் இயலும். அத்தகையவற்றைச் சாதிப்பதற்கு வேண்டிய சுதந்திரம் பத்திரிகைகளுக்கு வாய்ப்பது விரும்பி வரவேற்கத்தக்கது. (முற்றும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

53



ஒபாமா தான் மக்களிடமிருந்து கண்டு கேட்டதனைத்தையும் அறிக்கையாக வடித்து மார்ட்டி கொவ்மனிடம் சமர்ப்பித்தார். அவர் அதை வாசித்துவிட்டு "நல்லது ஆனால் பொதுவானது. நில அளவு செய்வது போல செய்திருக்கிறீர். மக்களை ஒரு அமைப்பின் கீழ்க் கொண்டு வர வேண்டுமானால் அவசியமற்ற விடயங்களில் வீணே காலத்தைக் கழிக்காமல் மக்களின் மையப் பிரச்சினைக்கு முடிவு காணும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதுதான் அவர்களை இயங்கவைக்கும். இல்லாவிட்டால் அவர்களின் ஈடுபாட்டை உருவாக்கக் கூடிய தொடர்பை அவர்களோடு ஏற்படுத்த முடியாது" என்றார்.

ஒபாமா தனது ஆத்திரத்தை அடக்கியவராக வெளியேறினார். தான் நேர்காணல் மூலம் அறிந்தவற்றை எப்படி ஆக்கபூர்வமான செயலாக மாற்றுவது என்பது அவருக்குத் தெரியவில்லை.

சிக்காகோ நகரின் வடபால் வசித்தவர் றூபி ஸ்ரைல்ஸ் என்ற தாய். அவள் தன் மகன் கைல்ஸ் பற்றிக் கவலை கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்தில் அவனுக்கு பிரச் சினை ஏற்பட்டது. அந்தப் பகுதியில் காடைத்தனம் அதிகரித்து விட்டது. கைலின் நண்பன் ஒருவன் அண்மையில்தான் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளான். அதுவும் றூபியின் வீட்டுக்கு முன் இது நடந்தேறியுள்ளது. ஆகவேதான் அவள் பயந்தாள். அவளின் துணையோடு அவளையொத்த பிரச்சினையுடைய பெற்றோர்களை ஒபாமா சந்தித்தார். அவர்களனைவரும் அவளைப்போலவே காவல்துறையினரின் கையாலாகாத் தன்மையையிட்டு கவலை கொண்டிருந்தனர். ஒபாமா அந்தப் பகுதி கட்டளையதிகாரியை அழைத்து அவருடன் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் பற்றி உரையாட முயற்சித்தார். போதகர் வண். றேய்னோல் சும் பங்குபற்றினார். கூட்டத்துக்கு பதின் மூன்று பேர்தான் வந்திருந்தனர். காவல் துறை அதிகாரி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். கூட்டம் முடிந்ததும் மார்ட்டி அங்கு வந்து ஒபாமாவின் கவலையை உணர்ந்தவராய் அவரை வெளியே அழைத்துச் சென்றார். அப்போது அவர் கூறியது ஒபாமாவுக்கு இன்னுமொரு பாடமாக அமைந்தது. காடைத்தனம் ஒரு பொதுவான பிரச்சினை. அது மக்களில் எந்தப் பதிவையும் ஏற்படுத்தாது. பிரச்சினைகள் தீர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும். மிக முக்கியமானது ஒபாமா அந்தப் பகுதியிலுள்ள தலைவர்களை நன்கு அறிந்திருக்கவேண்டும். அந்தச் சந்தர்ப்பமாவது இவ்வளவு விரைவாக அவருக்கு கிடைத்தது நன்மைக்கே என்றார் மார்ட்டி.

'தோட்டங்கள்' பொதுக் குடியிருப்புத் திட்டம் சிக்காகோ மாநகரத்தின் தென்கோடியில் அமைந்திருக்கிறது. அதில் இரண்டாயிரம் மாடி வீடுகள் இரண்டடுக்கு கட்டடத் தொடர்களாகச் செல்கின்றன. இவற்றிற்கு வடபால் மாநகரசபையின் வட்டார கழிவுநீர் வடிகால் மூலம் வெளியேற்றப்படும் கழிவுகளை சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதிலிருந்து வெளிக் கிளம்பும் துர்நாற்றம் காலநிலைக் கேற்றவாறு கூடியும் குறைந்தும் இறுக்கிப்பூட்டிய வீடுகளுக்குள்ளும் புகுந்து புரளி செய்கின்றது. துர்நாற்றம்,

## வெள்ளையர்களின் குடிமனைகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட கறுப்பின மக்கள்

நச்சுவாயு, வெட்ட வெளியான குடிமனைகளற்ற பிரதேசம் தான் இந்தத் தோட்டக் குடியிருப்பு. இது அமைந்துள்ள பகுதிக்கு 'அல்ற் ஜெல்ட்' என்று பெயர். பல நூற்றாண்டு காலமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் இதையடுத்துள்ள பல சதுர மைல் பரப்பில் கொண்டுவந்து போடப்பட்டன. இப்போது தொழிற்சாலைகள் மூடப்பட்டன. வேலைகள் தொலைந்தன. ஆகவே அந்த இடங்கள் குப்பை கூழங்களைக் கொட்டுமிடங்களாக மாறியதில் வியப்பேதுமில்லை. இந்த இடங்கள் தான் ஏழைமக்களின் குடியிருப்புக்களாக மாறின.

வெள்ளையர்களின் குடிமனைகளிலிருந்து புறம்பான பகுதியாக கறுப்பர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தோட்டங்களின் வீடுகள் நீண்டகாலமாக திருத்தப்படவில்லை.

ஒபாமா அந்தக் குடியிருப்புக்குள் தன் காரைத் திருப்பினார். அங்கேயுள்ள அன்னை மேரியின் தேவாலயத்துக்கு முன் இறங்கினார். அங்கிருந்த கட்டடத்தில் தான் அவர் முக்கிய தலைவர்களை நேரில் சந்திக்கப் போகிறார். கடந்த இரு மாதங்களாக அமைப்புப் பற்றிய எந்த வேலையும் நடைபெறவில்லை. காரணம் தங்கள் அத்திபாரம் பெரிதாக இல்லையென்று உணர்ந்தார் ஒபாமா.

எட்டு கத்தோலிக்க பகுதிகளும் ஆங்காங்கு சிதறிக் கிடந்தன. அங்கே வசித்தவர்களோ கறுப்பர்கள் ஆனால் அவர்களின் குருவானவர்கள் வெள்ளையர்கள். அவர்களின் வெளியேற்றத்தால் ஏற்பட்ட வெறுமையைப் போக்க எடுத்த முயற்சிகள் பயன் தரவில்லை. இந்த குருமார்களும் மாற்றலாகிப் போகத்தான் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜம்பொன்

மேலும் கறுப்பு மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையும் உற்சாகமும் குன்றியிருந்தன. ஒபாமா சந்தித்த கறுப்பர்களான ஏஞ்ஞலா சேர்ளி, மோனா ஆகியோரிடம் அது வெளிப்படையாகத் தெரிந்தது. (தொடரும்)

# நேபாள கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் புதிய ஆட்சி அமைக்க எதிர்க்கட்சிகள் முடிவு

(காத்மண்ட்)

நேபாளத்தில் கம்யூனிஸ்டுகள் தலைமையில் புதிய ஆட்சி அமைக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. நேபாளத்தில் இராணுவத்தளபதியைப் பதவிநீக்கம் செய்த விவகாரத்தில் பிரதமர் பிரசண்டாவுக்கும் ஜனாதிபதி ராம்பரன் யாதவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நேபாள அமைச்சரவை பதவி விலக்கிய இராணுவத் தளபதி ருக்மாங்கத்தைப் பதவியில் தொடருமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து பிரசண்டா பதவி விலகினார். ஜனாதிபதியின் நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு தொடரப்போவதாக மாவோயிஸ்டுகள் தெரிவித்துள்ளனர்.

பிரசண்டா பதவி விலகியதையடுத்து நேபாள கம்யூனிஸ்டுகளின் தலைமையில் புதிய ஆட்சி அமைக்க எதிர்க் கட்சிகள் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக 24 கட்சிகளின் கூட்டம் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் நடந்தது. கம்யூனிஸ்டுகள் ஆட்சி அமைத்தால் ஆதரவளிப்பதாக நேபாள காங்கிரஸ் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

புதிய அரசுக்கு ஆதரவளிக்கும்படி மாவோயிஸ்டுகளிடம் கோரப்பட்டது. இராணுவத் தளபதி ருக்மாங்கத் பதவி நீக்கம் செய்யப்பட்டால் புதிய அரசுக்கு ஆதரவளிப்பதாக மாவோயிஸ்டுகள் தெரிவித்துள்ளனர். புதிய ஆட்சி அமைக்க நேபாள கம்யூனிஸ்ட் முன் வந்திருப்பதால் இக்கட்சியின் பொதுச் செயலர் ஜலாநாத்தோ முன்னாள் செயலர் மாதவ் குமாரோ பிரதமராகத் தேர்வு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேபாள பாராளுமன்றில் மொத்தமுள்ள 601 இடங்களில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்கு 108 இடங்கள் உள்ளன. மாவோயிஸ்டுகளுக்கு 238 இடங்களும் நேபாள காங்கிரஸ் கட்சிக்கு 112 இடங்களும் உள்ளன. ஆட்சி அமைக்க 301 இடங்கள் தேவை. (ஓ-6)

## ஜேர்மனியில் தம்பதியினருக்கு அந்நாட்டு அரசு புதிய தடை

(பொலின்)

ஜேர்மனியில் தற்போது புதிதாக திருமணம் செய்யும் தம்பதியருக்கு அந்நாட்டு அரசு புதிய தடை விதித்துள்ளது.

அதாவது இரண்டுக்கு மேற்பட்ட பெயர்களை அவர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறு வைத்துக்கொள்ளும் பட்சத்தில் பெயர்களில் குழப்பம் ஏற்படுகிறது என்று அந்நாட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரிடா ரோஸ்மேரி என்பவர் ஹேன்ஸ் பீட்டர் குன்ஸ் ஹால்ஸ்டீன் என்பவரை திருமணம் செய்ய விரும்பினார். அப்போது அவர்கள் தங்களுக்கு மேலும் பல பெயர்களை சூட்டிக்கொள்ள விரும்பினார்கள் ஆனால் இதற்கு நீதிமன்றம் தடை விதித்தது .இதனால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். (ஓ-6)

# பக்டீரியாக்களை விண்ணுக்கு அனுப்பி ஆய்வு நடத்த இந்திய விஞ்ஞானிகள் முடிவு

(டில்லி)

விண்வெளி ஆராய்ச்சியில் உலகின் முன்னணி நாடுகளுக்கு சவால் விடும் வகையில் இந்தியா முன்னேறி வருகிறது.

அடுத்தடுத்து செயற்கைக் கோள்களை அனுப்பி சாதனை படைத்துவரும் இந்தியா கடந்த ஆண்டு நிலவுக்கு சந்திராயன் செயற்கை கோளை அனுப்பியது.

அடுத்த கட்டமாக நிலவுக்கு மனிதனை அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு இந்தியர் ஒருவர் நிலவில் தரை இறங்கி சோதனைகளை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலவில் அபரிதமாக உள்ள தாதுப் பொருட்கள் மற்றும் எரி பொருட்களை குறி வைத்து இந்தியா தன் ஆராய்ச்சியை தீவிரப்படுத்தியுள்ளது.

அதற்கு முன்னதாக பக்டீரியாக்களை விண்ணுக்கு அனுப்பி சில சோதனைகளை மேற்கொள்ள இந்திய விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

விண்ணில் பக்டீரியாக்களிடம் எத்தகைய மாறுதல்கள் ஏற்படுகிறது கதிர்வீச்சை எப்படி எதிர்கொள்கின்றன என்பது குறித்து ஆய்வு நடத்தப்படவுள்ளது. (ஓ-6)

# பிரேசிலில் கடும் மழையால் 190 நகரங்கள் பாதிப்பு

(பிரேசில்)

பிரேசில் நாட்டில் கடந்த சில வாரங்களாக பலத்த மழை பெய்துவருகிறது. இதனால் நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. வட கிழக்கு பகுதியில் உள்ள 190 நகரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பகுதியில் மட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். 15 பேர் வெள்ளத்தில் சிக்கி பலியாகியுள்ளனர். பிரேசிலில் உள்ள 8 மாநிலங்களில் 1 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வீடுகளை விட்டுவெளியேறி விட்டனர். மரான்னோ மாநிலத்தில் மட்டும் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளை விட்டு வெளியேறிய இவர்கள் தற்காலிக குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்தில் வீதிகள் முழுவதும் சேதம் அடைந்து விட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து படகுகள் மூலம் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

வெள்ளசேத பகுதிகளை பிரேசில் அதிபர் ஜயில் இனாசியோலுலா டாசில்வா விமானத்தில் சென்று பார்வையிட்டார். வீடுகளை இழந்து தவிர்க்கும் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

வெள்ளத்தால் பாதித்த மக்களுக்கு உணவு, உடை மற்றும் போர்வைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஓ-6)

# ஐதராபாத்தில் சாக்கடை கலந்த தண்ணீர் குடித்த 7 பேர் பலி

## 1300 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி



(நகரி)

ஆந்திர மாநிலம் ஐதராபாத் போலக்பூர் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடி நீருடன் சாக்கடை கலந்து விட்டது. இதனால் குடி நீர் மஞ்சள் கலராக மாறியது. இதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த சிலர் குடி நீர் வாரிய அதிகாரிகளிடம் புகார் செய்தனர்.

ஆனால் அவர்கள் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்நிலையில் நேற்று முன்தினம் சாக்கடை கலந்த நீரை அப்பகுதி மக்கள் வேறு வழியின்றி குடித்தனர்.

இந்த நீரை குடித்ததும் பலருக்கு வாந்தி -பேதி ஏற்பட்டது. பலர் ஆங்காங்கே மயங்கி விழுந்தனர்.

இதனால் போலக்பூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வாந்தி பேதியால் அவதிப்பட்ட நால்வரை அப்பகுதி மக்கள் அங்குள்ள காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர்கள் 4 பேரும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதே போல் பீவர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூவர் சிகிச்சை பலனின்றி இறந்தனர்.

நேற்று முன்தினம் சாக்கடை குடிநீர் குடித்த சுமார் ஆயிரத்து 300 பேர் அரச மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 50 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். (ஓ-6)

# இரசாயன குண்டு வீச இலங்கை திட்டம்

## வைகோ குற்றச்சாட்டு

(சென்னை)

விடுதலைப்புலிகளை அழிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு முல்லைத்தீவில் உள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது நாசகார இரசாயன குண்டுகளை வீசுவதற்கு இலங்கை அரசு திட்டம் வகுத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று ம.தி. மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் கோரிக்கை அயோக்கியத்தனமானது என்று இலங்கை பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கண்டனம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் இலங்கையில் தீவிரவாதத்தை ஒழிக்க இந்திய அரசு உதவுகிறது என்றும் பாராட்டியுள்ளார்.

மூன்றரை இலட்சம் தமிழ் மக்களை பட்டினி போட்டு கொல்ல இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதால் பழியில் இருந்து தப்பித்துக் கொள்ள கருணாநிதி 25 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக விளம்பரம் செய்கிறார்.

விடுதலைப்புலிகளை அழிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு முல்லைத்தீவில் உள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது உலக நாடுகள் தடை செய்துள்ள நாசகார இரசாயன குண்டுகளைவீசுவதற்கு இலங்கை அரசு திட்டம் வகுத்துவிட்டது. இதற்கு உரிய ஆயுதங்கள் இந்திய அரசால் தரப்பட்டவை என்றும் அப்படி குண்டுகளை வீசுகிறபோது விஷவாயு அறைகளில் ஹிட்லரின் நாஜீகள் யூதர்களை அடைத்து கொன்றது போல் இலங்கை தமிழர்கள் கொல்லப்படுவர் அச்சமயத்தில் சிங்கள இராணுவத்தினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாக்கின்ற நவீன முகமூடிகள் வழங்கப்பட்டுவிட்டதாகவும் இலங்கையில் இருந்து கிடைத்துள்ள நம்பகமான தகவல்கள் நம்மை அதிர்ச்சியில் உறைய வைக்கின்றன.

இப்படி ஒரு பேரழிவு நடக்குமானால் அதற்கான முழுப்பொறுப்பு மரணப்பழிக்கு சோனியாவின் வழிகாட்டுதலில் இயங்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தான் காரணம் என்று குற்றம் சாட்டுகின்றேன்.

தமிழ் இனத்தையே கரு அறுக்க ராஜபக்ஷவோடு சேர்ந்து கொண்டு மத்திய அரசை ஆட்டிப்படைக்கிற சோனியா வகுத்த சதித்திட்டத்தால் தான் ஐந்து ஆண்டுகளாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு திட்டமிட்டே ஆயுத உதவிகள் செய்துள் ளது என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங் கள், சாட்சிகள் ஏராளம் உள்ளன.

தமிழ் இனக்கொலைக்கு உடந்தையாக இருந்த துரோகக் குற்றச்சாட்டில் இருந்து கருணாநிதி தப்ப முடியாது வரலாறும் தமிழர்களின் சந்ததிகளும் ஒரு போதும் இவர்களை மன்னிக்க மாட்டார்கள் இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இலங்கை தமிழ்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அரசு தூங்குகிறது

## இராமநாதபுரத்தில் வெங்கையாநாயுடு பிரசாரம்

(இராமநாதபுரம்)

இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அரசு டில்லியில் தூங்குகிறது என பாரதிய ஜனதா கட்சியின் அகில பாரத துணைத் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் தொகுதி பா.ஜ.வேட்பாளர் திருநாவுக்கரசை ஆதரித்து சாயல்குடி பகுதியில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசியதாவது இலங்கை தமிழர் பிரச்சினைகளை மத்திய மாநில அரசு சரியாக கையாளவில்லை. இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் போது கருணாநிதி போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதாகக் கூறினார். யாரை எதிர்த்து கருணாநிதி உண்ணா விரதம் கடையப்பு நடத்துகிறார். இதனால் பொது மக்கள் தான் அதிகம் பாதிப்படைந்தனர்.

இலங்கையில் லட்சக் கணக்கான மக்கள் வீதிகளிலும் காட்டிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குடிக்க தண்ணீர் இன்றியும் குழந்தைகளுக்கு பால் கிடைக்காமலும் உள்ளனர். இதைப் பார்க்கும் போது கண்களில் இரத்தக்கசிவு ஏற்படுகிறது. இலங்கையில் தமிழர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அரசு டில்லியில் தூங்குகிறது. இந்திய அரசாங்கம் போர் நிறுத்தம் கோரியதாக இலங்கை அரசு கூறவில்லை. பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பு தருவதுடன் நிரந்தர தீர்வு கிடைக்க முயற்சி எடுக்கப்படும் என்றார். (ஓ-6)

# இலங்கை தமிழர் பிரச்சினையில் சிதம்பரத்தின் அரசியல் மோசடி

## டி.ராஜா காட்டம்



(சிவகங்கை)

இலங்கை தமிழர் பிரச்சினையில் ப.சிதம்பரம் அரசியல் மோசடி செய்கின்றார். என இந் திய கம்யூ தேசிய செயலாளர் டி .ராஜா தெரிவித்துள்ளார். சிவகங்கையில் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜ கண்ணப்பனை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு டி.ராஜா பேசியதாவது,

தி.மு.க. ஆட்சி மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டது. தவறான கருத்துக்களை கூட தர்க்க ரீதியாக வாதிடக் கூடிய ப.சிதம்பரம் தோல்விப் பயத்தால் நிலை தடுமாறி பேசுகிறார்.

இலங்கையில் ஒரு அமைப்புக்கு எதி ரான தாக்குதலால் தமிழ் இனம் அழிக்கப்படுகிறது அங்கு போர் நிறுத்தம் வேண்டும் என இந்தியா கோரவில்லை. இந்தியாவின் இராணுவ உதவிக்காக இலங்கை அரசு நன்றி தெரிவித்துள்ளது.

முதல்வர் கருணாநிதி உண்ணாவிரதம் இருந்த போது போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என ப.சிதம்பரம் அறிவிக்கிறார். அவர் எப்போது இலங்கை அரசின் சட்டத் தரணியாக மாறினார்? இலங்கை தமிழர் பற்றி கருணாநிதி ப.சிதம்பரம் பேசுவது அரசியல் மோசடி. இதற்கு மக்கள் பாடம் புகட்டுவர் என்றார். (ஓ-6)

# நீரிழிவு சிகிச்சை நிலையம் - காலத்தின் தேவை




எமது பிரதேசத்தில் வாழும் மக்களை அதிகளவில் பாதிக்கும் நோய்களில் நீரிழிவு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இது இன்சுலின் குறைவாக சுரக்கப்படுவதனால் அல்லது உடலில் இன்சுலின் தொழிற்பாட்டுக்கு எதிர்ப்பு ஏற்படுவதனால் ஏற்படுகின்றது. பெருமளவிலான மக்கள் இன்சுலின் சுரப்பிற்கு எதிர்ப்பு எனும் வகை 2 ஐச் சேர்ந்த நீரிழிவினாலேயே பாதிக்கப்படுகின்றனர். இவர்களிற்கு இந் நோய்க் கட்டுப்பாட்டில் இல்லாதவிடத்து, இருதயம், சிறுநீரகம், மூளை, கண், பாதங்கள் என்பவற்றிற்கு செல்லும் குருதிக் குழாய்களில் மாற்றங்கள் நிகழ்வதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றை ஆரம்பத்தில் கண்டறியின் இச் சிக்கல் தன்மைகள் தீவிரமாவதைத் தடுக்க முடியும். இதற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட, கிரமமான பரிசோதனைகள் தேவையாயுள்ளது.

**யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையம் இன்று திறந்து வைக்கப்படுகின்றது. அதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

யாழ்.போதனா வைத்தியசாலையை எடுத்துக்கொண்டால் பல ஆயிரக்கணக்கான நீரிழிவு நோயாளிகள் இங்கே சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் சிறந்த கவனிப்பை வழங்குவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டே கணனி மயப்படுத்தப்பட்ட சிகிச்சை நிலையமொன்றை ஆரம்பிக்கவேண்டுமென்ற திட்டம் எழுந்தது. காலத்தின் தேவை கருதி ஆரம்பிக்கப்படும் இச் சிகிச்சை நிலையத்திற்கு சுகாதார அமைச்சும், IMHO எனப்படும் சர்வதேச சுகாதார மருத்துவ நிறுவனமும் தம் பங்களிப்புக்களை செய்துள்ளன. இவற்றின் உதவியினால் நீரிழிவு சிகிச்சை நிலையத்திற்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகின்றது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் சலரோக நோயாளிகளுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இதன் சேவையானது, ஏனைய, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நீரிழிவு நோயாளிகளுக்கும் பயன்படும் காலம் அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

இச் சிகிச்சை நிலையத் தில் சலரோக நோயாளி முழுமையாகப் பரி சோதிக்கப்படுவதுடன் அவருக்குரிய அறிவு ரைகளும் வழங்கப்படும். அதன் பின் அவர் தனது மாதாந்த சிகிச்சையை முதலில் சென்று வந்த கிளினிக்கிலேயே பெற்றுக் கொள்வார்கள். தேவைக்கேற்ப அவர் நீரிழிவு சிகிச்சை நிலையத்திற்கு அழைக்கப்பட்டு பரிசோதிக்கப்படுவார்.

எதிர்வரும் காலங்களில் நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் கணனியில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பல

**டாக்டர் (திருமதி) பிரதீபனா செல்வகரன்**
**வைத்திய அதிகாரி / நீரிழிவு சிகிச்சை நிலையம்**

ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கும், இச் சிகிச்சை நிலையத்தின் சேவையை விஸ்தரிக்கவும் அனைவரினதும் ஒத்துழைப்பும் எமக்கு கிடைக்குமென நம்புகின்றோம்.

# ஊடக சுதந்திரம் குறித்து சர்வதேச நாணயநிதியம் அரசாங்கத்திற்கு அழுத்தம் தரவேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் குறித்து சர்வதேச நிதியம் அரசாங்கத்திற்கு அழுத்தம். தர வேண்டுமெனக் கோரி எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, நிதியத்தின் பணிப்பாளர் டொமொனிக்யூ ஸ்ட்ராஸிற்கு கடித மொன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பாரியளவு கடன் தொகையை வழங்குவதற்கு முன்னர் நாட்டில் காணப்படும் ஊடக சுதந்திரம் குறித்து ஆராயப்பட வேண்டும் என எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஊடக சுதந்திரம் குறித்து அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியம் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் குறித்துஉறுதி மொழிகளை அரசாங்கத்திடம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஓ-6)

# பிரித்தானியாவில் ஐந்தாவது நாளாக மாணவர்கள் உண்ணாநிலைப்போராட்டம்

(லண்டன்)




கடந்த 30 நாட்களாக பிரித்தானிய தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றும் வழமைபோல் பல நூற்றுக்கணக்கான மக்களின் கோரிக்கை கோசங்களுடன் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் உண்ணா நிலைப் போராட்டம் நேற்று 5ஆவது நாளாக தொடர்ந்தது.

மாணவர்கள் தங்கள் பசியைத் துறந்து தமிழ் மக்களை காப்பாற்ற உறுதியுடன் உண்ணா நிலைப்போராட்டத்தை தொடர்கின் றனர். இவர்களில் சிவாவின் உடல் நிலை மிகவும் கவலைக்குரிய விதமாக இருக்கும் போதும் அவர் தன்னுடைய உண்ணா நிலைப் போராட்டத்தை தொடர்கின்றார்.

இந்தியா , இலங்கை அரசின் தமிழ் இனப் படுகொலைக்கு ஆதரவளிப்பதைக் கண் டித்து நேற்று லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன் தமிழ் மக்களால் ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அங்கு கூடிய மக்கள் கோசங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக நாடாளுமன்ற சதுக்கத்தை வந்தடைந்தனர்.(ஓ-6)


COURSE LENGTH -SIX MONTH
ஆறு மாத கால டிப்ளோமா

தபால் மூலம்

Apr.2009-Sep.2009

1 DIP.IN.PSYCHOLOGY (உளவியல் டிப்ளோமா)
2 DIP.IN.OFFICE ADMINISTRATION (காரியாலய நிர்வாக டிப்ளோமா)
3 DIP.IN.CIVIL ENGINEERING (சிவில் என்ஜினியரிங் டிப்ளோமா)
4 DIP.IN.NURSING ADMINISTRATION
5 DIP.IN.HUMAN RESOURCES MANAGEMENT (மனித வள முகாமைத்துவ டிப்ளோமா)
6 DIP.IN.EDUCATIONAL MANAGEMENT (கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)
7 DIP.IN.BUSINESS MANAGEMENT (வியாபார முகாமைத்துவ டிப்ளோமா)
8 DIP.IN.HEALTH & HOSPITAL MANAGEMENT
9 DIP.IN.BANKING MANAGEMENT
10 DIP.IN.RESEARCH & DEVELOPMENT

பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்:
கல்முனை, மட்டக்களப்பு,திருகோணமலை, கிண்ணியா,மூதூர், புத்தளம், வவுனியா ,மன்னார்,யாழ்ப்பாணம்,கண்டி,கொழும்பு,பதுளை, நுவரேலியா,ஹட்டன், அனுராதபுரம்.

(2534)

◆ மேலதிக விபரங்களுக்கு :
COUNTRY CO-ORDINATOR
MARUTHUR.A.HASSEN
(B.Sc.Psychology, M.Sc.Psychology)
◆ யாழ்ப்பாண தொடர்பு மையம்
S.N.Piratheepan
T.P-077-6702505

17 வருட கால அனுபவம்
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24,1st Floor,Super Market Complex Main Street, Sainthamaruthu-07
Web: WWW.AIIMAS.COM,WWW.IIMAT.COM,WWW.AICOMAS.ORG
Tel: 060 267 1749, 060 267 9688, 067 222 2917, 071 803 4848

விண்ணப்பம் முடிவு திகதி : 10-05-2009


# இனவாதமும் போர் வெறியும் தொடருமானால் நமது தேர்தல் உடன்பாடு தொடரமுடியாது

## ரணிலுக்கு மனோகணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி யுத்தத்தை தொடரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்திருப்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். பாதுகாப்பு வலயத்திற்குள் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்ற நடைமுறை உண்மை உங்களது கட்சிக்கு தெரியாதா? ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரபூர்வ ஊடகவியலாளர் மாநாடுகளில் இத்தகைய இனவாதக் கருத்துக்களை தெரிவிக்கும் உங்களது கட்சியைச் சார்ந்த இனவாதிகளை நீங்கள் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

இத்தகைய பச்சை இனவாதமும், போர் வெறியும் தொடருமானால் உங்களது கட்சியுடனான ஜனநாயக மக்கள் முன்னணியின் தேர்தல் உடன்பாடு தொடர முடியாது என்று முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மனோகணேசன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று சர்வதேச சமூகத்தின் மற்றும் தேசிய மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தங்கள் காரணமாக பாதுகாப்புவலயம் என அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளின் மீது கனரக ஆயுதங்களின் பாவனையை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது. இதன் அர்த்தம் இதற்கு முன்னர் இத்தகைய கனரக ஆயுதங்கள் பெருந்தொகையில் பொதுமக்கள் வாழும் பகதிகளின் மீது பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும்.

இன்றைய இந்த இடைநிறுத்தல் நடைமுறை ஓரளவாவது பாதுகாப்பு வலயத்தில் வாழும் மக்களுக்கு நிம்மதியைத் தருகின்றது. இந்நிலையில் கனரக ஆயுதங்களை தொடர்ந்து பயன்படுத்தி பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோருவது வெட்கக் கேடானது. இதன்மூலமாக சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறமுடியும் என்று உங்கள் கட்சியில் எவராவது நினைப்பார்களானால் அது முட்டாள்தனமாகும்.

அரசாங்கத்தின் யுத்தக் கொள்கை ஆதரிக்கப்படும் பொழுது அதன் மூலமாக இன்னமும் அரசாங்கத்தின் செல்வாக்குத்தான் அதிரிக்குமே தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி அதிகரிக்காது.

மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் போருக்கு எதிரான சிங்கள முற்போக்கு மக்களின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி இழக்க வேண்டி வரும். சமீபத்தில் நடந்து முடிந்த மேல் மாகாண சபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடனான எமது கட்சிக்கு இருப்பது தேர்தல் உடன்பாடே தவிர, கொள்கை உடன்பாடு கிடையாது என் நான் பகிரங்கமாக அறிவித்திருந்தேன்.

இன்று நான் சொன்னது நூறு விகிதம் சரியாகிவிட்டது. எனது கருத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் உங்களது கட்சியின் நேரடி தமிழ் வேட்பாளர்களுக்கும் சில பெரும்பான்மை இன வேட்பாளர் களுக்கும் தவறுதலாகத் தமது விருப்பு வாக்குகளை வழங்கிவிட்ட ஒரு தொகை தமிழ் வாக்காளர்கள் இன்று வேதனைப்படுகிறார்கள். எனக்கு வருகின்ற தொலைபேசி அழைப்புகளும், மக்கள் கருத்துக்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

எங்களது கட்சிக்கு கிடைத்துள்ள அனைத்து வாக்குகளும் போருக்கு எதிரான வாக்குள் என்பதையும் இனவாதிகளின் இழுத்த இழுப்பிற்கெல்லாம் துணைபோகும் கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி ஒருபோதும் இருக்காது என்பதையும் உங்களுக்குஉறுதியாகதெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்றார். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

# கௌரவிப்பு விழா -09.05.2009

## கௌரவம் பெறும் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை க.பொ.த(உ/த) 2008 மாணவர்களின் பெயர் விபரம்

### சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | ரி.சுதர்சன் | கலை | 3A |
| 02 | ஆர்.ரஜீபரன் | கலை | 3A |
| 03 | ஜி.மேரியூப்ரேசியா | கலை | 3A |
| 04 | எஸ்.சரூபன் | கலை | 2A,B |
| 05 | ஏ.டில்லி பபீனா | கலை | 2A,B |

### சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | இ.நிரோஜா | கலை | 3A |
| 02 | ச.கங்கா | கலை | 2A,B |
| 03 | து.சங்கரதாஸ் | வர்த்தகம் | 2A,B |

### வட்டு மத்திய கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | அ.யோகினி | கலை | 2A,B |
| 02 | வை.கேதீஸ்வரி | கலை | 2A,B |
| 03 | வ.சண்முகராசா | கலை | 2A,B |

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | செ.ஜதுசாஜிரா | வர்த்தகம் | 3A |
| 02 | செள.ஆரூரன் | கணிதம் | 2A,B |
| 03 | ச.சுமித்திரா | கலை | 2A,B |

### வட்டு இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | ம.மதியழகி | கலை | 3A |
| 02 | தே.கென்ஸ்மன் | கலை | 2A,B |
| 03 | யோ.பாஸ்கரன் | கணிதம் | 2A,B |

### வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | வ.அகிலாஜினி | கலை | 3A |
| 02 | ப.துளசி | கலை | 3A |
| 03 | ம.கிருஸ்ரீனா | கலை | 3A |
| 04 | ம.சுகிர்தன் | கலை | 3A |
| 05 | கு.தசிகரன் | கலை | 2A,B |
| 06 | தி.மதன் ராஜ் | கலை | 2A,B |
| 07 | ர.நிலக்ஷன் | கலை | 2A,B |
| 08 | உ.சௌந்தீசன் | கலை | 2A,B |
| 09 | பா. தினேஸ்குமார் | கலை | 2A,B |
| 10 | சி.சரண்யா | கலை | 2A,B |

### உடுவில் பெண்கள் பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | மு. பிரின்சிலா | கலை | 2A,B |

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | எஸ்.கிறிஸிகா | கலை | 3A |
| 02 | சு.நிரோசனா | கலை | 3A |
| 03 | எஸ்.வானதி | கலை | 3A |
| 04 | ஆர்.ஆன்றொசாரியா | கலை | 3A |
| 05 | க.சித்திரா | கலை | 2A,B |
| 06 | பு.யசோதா | கலை | 2A,B |
| 07 | இ.நிரோஜா | கலை | 2A,B |
| 08 | அ.தயானி | கலை | 2A,B |
| 09 | சி.சறோஜா | கலை | 2A,B |
| 10 | ப.சுகிர்தா | கலை | 2A,B |
| 11 | எஸ்.சுஜித்தா | கலை | 2A,B |
| 12 | க.தயாநிதி | கலை | 2A,B |
| 13 | த.துளசி | கலை | 2A,B |
| 14 | ச.விஜிதா | கலை | 2A,B |

### மானிப்பாய் இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | சி.சிவரூபன் | கலை | 3A |
| 02 | அ.றில்வன் | கலை | 3A |
| 03 | ஜே.ஜான்ஸ்ரன் | கலை | 2A,B |
| 04 | ஏ.டினேஸ் | வர்த்தகம் | 2A,B |

### இராமநாதன் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | நா. வினுசா | கலை | 3A |

### பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | கோ. மோகனப்பிரியா | கலை | 2A,B |

### விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | கே.கணரூபன் | கணிதம் | 3A |
| 02 | எஸ்.விஜயகுமார் | கலை | 3A |
| 03 | எஸ்.சிவப்பிரியன் | கலை | 2A,B |
| 04 | எஸ்.சதீபா | கலை | 2A,B |

### பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | ரி. மேனகா | கலை | 2A,B |
| 02 | எம். மயூறி | கலை | 2A,B |

### மாதகல் சென்யோசப் மகாவித்தி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | வை. கெங்கேஸ்வரி | கலை | 2A,B |

### தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | செ.குகப்பிரியா | கலை | 3A |
| 02 | கி.ரஜீவன் | கலை | 3A |
| 03 | மு.தயாபரன் | கலை | 3A |
| 04 | தே.திவ்யா | கலை | 3A |
| 05 | இ.பிரியதர்ஷினி | வர்த்தகம் | 3A |
| 06 | இ.கவிதா | கலை | 2A,B |
| 07 | க.ஜானி | கலை | 2A,B |
| 08 | த.நிஷாந்திலதா | கலை | 2A,B |
| 09 | இ.கஜிதரன் | கலை | 2A,B |
| 10 | ம.நிஷாலினி | கலை | 2A,B |
| 11 | த.மதுரா | கலை | 2A,B |
| 12 | இ.யுதர்சன் | கலை | 2A,B |
| 13 | சொ.கௌதமி | கலை | 2A,B |
| 14 | கு.தரணிதன் | கலை | 2A,B |
| 15 | தி.ஜாமினி | கலை | 2A,B |
| 16 | செ.நிரோஜ் | கலை | 2A,B |
| 17 | மு.ஜனனி | வர்த்தகம் | 2A,B |

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | ஜே.பிரசாந்தன் | கலை | 3A |
| 02 | வி.ஜனார்த்தனன் | கலை | 3A |
| 03 | எஸ்.பிரேமலதா | கலை | 3A |
| 04 | எம்.றஜந்தன் | கலை | 2A,B |
| 05 | கே.றஜந்தன் | கலை | 2A,B |
| 06 | கே.சஞ்சுதா | கலை | 2A,B |

### இளவாலை கன்னியர் மடம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | சிலூட்ஸ்மேரிறெசாலின் | வர்த்தகம் | 3A |
| 02 | பா.சுவேதா | கலை | 3A |
| 03 | ந.சாகினி | உயிரியல் | 2A ,B |
| 04 | செ.ஜெயன்சுகன்யா | வர்த்தகம் | 2A ,B |
| 05 | ச.மரிசியா அன்ரலா | கலை | 2A ,B |

### இளவாலை புனித ஹென்றி அரசர் பாடசாலை


| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | கி. சங்கீத் | கலை | 2A ,B |

### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | சி.அனுஷன் | கலை | 3A |
| 02 | ச.தக்சலா | கலை | 2A ,B |
| 03 | ப.பார்த்தீபன் | கலை | 2A ,B |
| 04 | கு.சுதர்ஜினி | கலை | 2A ,B |
| 05 | ஆர். ரவிந்தா | கலை | 2A ,B |

# மனிதாபிமான அமைப்புகள், ஊடகங்களை வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு அனுமதியுங்கள்

## பிரிட்டன் எம்.பி.க்கள் குழு அமைச்சர் ரோஹித்தவிடம் கோரிக்கை



(கொழும்பு)

மனிதாபிமான அமைப்புக்களும் ஊடகங்களுக்கும் வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி முகாம்களுக்கு செல்ல அனுமதி வழங்குமாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்கு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டு திரும்பிய பின்னர் வெளிவிவகார அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது பிரிட்டன் எம்.பிக்கள் குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியது. அதனையடுத்து வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்கு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் மாலை கொழும்பு திரும்பிய குழுவினர் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது மனிதாபிமான நிலைவரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அதிகளவான மக்களுக்கு அரசாங்கம் செய்து கொடுத்துள்ள வசதிகள் குறித்து பிரிட்டன் எம்.பிக்கள் குழு திருப்தி வெளியிட்டதாக அமைச்சு தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் மனிதாபிமான அமைப்புக்களுக்கும் ஊடகங்களுக்கும் வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி முகாம்களுக்கு செல்ல அனுமதி வழங்குவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ஓ-6)

# பீடிகளுக்குள் கஞ்சாவை மறைத்து கைதிகளுக்கு வழங்கிய நபருக்கு ஆறுமாத கால சிறை

(கொழும்பு)

பீடிகளுக்கள் சூட்சுமமான முறையில் கஞ்சாவை மறைத்து வைத்து அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு வழங்க முற்பட்ட நபரொருவருக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து ஆறு மாத கால சிறைத் தண்டனை விதித்து அநுராதபுரம் நீதிமன்ற மேலதிக நீதிபதி சிவந்த மஞ்சநாயக்க உத்தரவிட்டார்.

இதற்கு மேலதிகமாக குற்றவாளிக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் இதை செலுத்தத் தவறும் பட்சத்தில் சிறைத் தண்டனையை மேலும் நான்கு மாத காலத்திற்கு நீடிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

குறித்த நபர் பீடிக்குள் கஞ்சாவை மறைத்து கைதிகளுக்கு வழங்கி வருவதாக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இந்நபர் எடுத்து வந்த பார்சலைப் பொலிஸார் பரிசோதித்துள்ளனர்.

இதன்போது பீடிகளுக்குள் கஞ்சா அடைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவரைக் கைது செய்த சிறைச்சாலை அதிகாரிகள், அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த பின்னர், பொலிஸாரே இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். (ஓ-6)

இரண்டு முயல்களை நீங்கள் ஒரே சமயத்தில் பிடிக்க முயன்றால் இரண்டும் உங்களிடமிருந்து தப்பிவிடும்.

- இந்தியா

வலம்புரி

## இலங்கைக்கு சர்வதேசத்தால் பெரும் ஆபத்து உண்டு

இலங்கை அரசு எவருடைய கருத்துகளுக்கும், கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்காமல் நடந்து கொள்கிறது.

இந்த நடப்பு தற்துணிவானது என யாரேனும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த நினைப்பு ஆரோக்கியமானதல்ல.

சர்வதேசம் எந்த விடயத்தையும் முதலில் மெதுவாகவே எடுத்துக் கூறும்.

இந்த மென்மையான போக்கு நாட்டுக்கு நாடு, பிரச்சினைகளின் தாற்பரியத்தைப் பொறுத்து மாறுபடலாம்.

அவ்வகையில் இலங்கைத் தமிழர் விடயத்தில் சர்வதேசத்தின் மென்மைத்தனம் நீண்டு செல்கிறது.

நீண்டு செல்லும் சர்வதேசத்தின் மென்மைத் தனத்தை இலங்கை அரசு பலவீனமாகவோ, அன்றி இலங்கைத் தமிழருக்காக நியாயம் கேட்பதற்கு யாருமே இல்லை என்ற முடிவுக்கோ வந்துவிடக் கூடாது.

வன்னியில் போர் நடக்கும் போது லண்டன் வீதியில் போக்குவரத்துத் தடைப்படுகிறது.

ஐ.நா. சபை வளாகத்தில் கோஷம் ஒலிக்கிறது. கனடாவில் தமிழ் மக்கள் ஒன்று கூடி உரக்கக் குரல் கொடுக்கின்றனர்.

இதற்கு மேலாக உண்ணாவிரதம், நீண்ட ஊர்வலம் என்ற நிகழ்வுகள் அனைத்தும் சர்வதேசத்தை அதிர வைக்க, எம் உறவுகள் வாழும் தமிழகத்தில் சோதரர்கள் தீக்குளித்து தங்கள் இனப்பாசத்தை பறைசாற்றுகின்றனர்.

இவற்றையெல்லாம் இலங்கை அரசு வேடிக்கையாக- விளையாட்டாக நினைப்பது நல்லதல்ல.

இப்போது இலங்கைத் தமிழர் விவகாரம் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் சூடு பிடித்துள்ளது. இருந்த ஆட்சியைத் தூக்கி எறியும் அளவிற்கு அங்கு நிலைமை மோசமாகிவிட்டது.

தனித்து தமிழகத்தில் மட்டுமன்றி இந்திய தேசம் முழுவதும் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுக்கின்றன.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இலங்கைத் தமிழருக்குத் துரோகமிழைத்துவிட்டனர் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளன.

இதனால் காங்கிரஸின் வெற்றி கவலைக்கிடமாகவே உள்ளது.

இலங்கைத் தமிழர் விடயத்தில் தமது அணுகுமுறை தவறானது என்பதைத் திருமதி சோனியா காந்தியும் அவரின் பிள்ளைகளும் உணரத் தொடங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழர் குறித்துத் தாம் கவலை கொள்வதாக சோனியா காந்தியின் புதல்வர் ராகுல் காந்தி கூறிய விடயம் இங்கு நோக்குதற்குரியது.

ஆக, உலகம் முழுவதும் இலங்கைத் தமிழர் விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையிலும், தெய்வம் நின்றறுக்கும் என்ற எங்கள் அசையாத நம்பிக்கையிலும் இலங்கைக்கு மிக விரைவில் சர்வதேசத்தால் ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உண்டு என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

# இலங்கைத் தமிழர்களுடனான இன முரண்பாட்டை பயங்கரவாதத்துக்கு எதிரான போரென சித்தரிப்பு

## ஜனாதிபதி ராஜபக்ஷவை விமர்சித்துள்ள பிரிட்டன் ஆயர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுடனான இனமுரண்பாட்டை பயங்கரவாதத்திற்கு எதிரான போரென இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சித்தரிப்பதாக பிரிட்டனின் போர்ட்ஸ் மௌத் ஆயர் விமர்ச்சித்துள்ளார்.

லண்டனின் பிரபுக்கள் சபையில் கேள்வி நேரத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே போர்ட்ஸ்மௌத் ஆயர் ஹென்னத் ஸ்ரீ வென்சன் ஜனாதிபதி ராஜபக்ஷவை விமர்ச்சித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் அந் நாட்டின் புராதன மக்கள். அங்கு அவர்களுக்கு இன, மத ரீதியான முரண்பாடுகள் உள்ளதுடன் இது ஒரு புதிய விடயம் அல்லவெனவும் ஆயர் ஸ்ரீவென்சன் கூறியுள்ளார்.

அத்துடன் பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற பதமானது நவீன பிதற்றல் முறையின் ஓர் அம்சமென இச் சபையில் உள்ளோரும் வெளியில் உள்ளோரும் நன்கறிவாரென வும் ஆயர் ஸ்ரீ வென்சன் தெரிவித்தார்.

இந் நிலையில் அங்கு கருத்துத்தெரிவித்த வெளி விவகார அமைச்சக அதிகாரி மல்லோச் பிரௌண் ஆயரின் கருத்துடன் ஒத்துப்போகும் அதேவேளை பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற வார்த்தை வழக்கத்துக்கு மாறான சொல் என்பதுடன் தந்திரோபாயச் செயற்பாட்டுக்காக பயன்படுத்தும் ஓர் சொற்றொடருமாகும்.

இலங்கையில் புராதன இரு இனங்களிடையேயான சச்சரவே இதுவென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் இச்சச்சரவு தற்பொழுது வன்முறைகள் அதிகம் நிறைந்த சண்டையாக மாறியுள்ளதுடன் இரு தரப்பும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ-6)

# நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான பிறப்பு, விவாக மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு கொழும்பு மத்திய பதிவேட்டறையில் தனியான கருமபீடமொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் அறியத்தந்துள் ளார் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மாவட்டச் செயலக மாவட்டப் பதிவகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சான்றிதழ் தேவைப்படுவோர் விண்ணப்பங்களை தங்கள் நலன்புரி நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே 126 விண்ணப்பங்கள் நலன்புரி நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு யாழ்.மாவட்ட பதிவிற்கான பிறப்புச் சான்றிதழ்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன், வெளிமாவட்டங்களுக்குரிய 30 விண்ணப்பங்கள் உரிய நடவடிக்கைக்காக கொழும்பு மத்திய பதிவேட்டறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச)

## இலங்கைக்கான உதவித் தொகையை கனடா அதிகரித்துள்ளது

(கொழும்பு)

கனடாவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சர் பெபர்லி ஜே ஒடாவின் இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்தொகையை கனடா அதிகரித்துள்ளது. 7.5 மில்லியன் அமெரிக்க டொலராக தனது உதவித் தொகையை கனடா உயர்த்தியுள்ளது.

பொதுமக்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இதனால் அவர்களுக்கான உதவித்தொகையை அதிகரிக்க தீர்மானித்துள்ளோம் என்று கனேடிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் மனித நேய உதவிகள் குறித்து கனேடிய அமைச்சர் இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான உணவு, நீர், தற்காலிக கூடாரங்கள் மற்றும் மருத்துவ உதவிப்பொருளுக்கான மேலதிக நிதியுதவி வழங்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

மோதல்கள் நிறுத்தப்படவேண்டும் என நாங்கள் அனைத்துத் தரப்பிடமும் கோரிக்கை விடுக்கிறோம். அத்துடன் உடனடி உதவிகள் தேவைப்படும் பகுதிகளுக்கு மனித நேயப்பணியாளர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக சீனா ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கவுள்ளது. (ஓ-6)

## செயலமர்வு

தரம் 11 வரலாறு பாடத்துக்கான விசேட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

## சுவிஸில் இரண்டாவது நாளாக தொடரும் உண்ணா நிலைப்போராட்டம்

(கொழும்பு)

சுவிஸில் பேர்ண் பாராளுமன்ற முன்றலில் கடந்த 4ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கரன் எனும் இளைஞர் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

- உடனடியாக போரை நிறுத்த வேண்டும்.
- வன்னி மக்களுக்கான உணவு மற்றும் மருந்துகளை அனுப்பி வைக்க வேண்டும்.

எனும் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தும் சுவிஸ் அரசாங்கத்தின் மௌனத்தைக் கலைத்து உடனடி நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் எத்தனை இடர்கள் தடைகள் வரினும் அவற்றையெல்லாம் எதிர் கொண்டு இரவு பகலாக உறுதி தளராது இப்போராட்டம் தொடருமெனவும் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ள கரன் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கடவுள் உன் உயிர் மூச்சு -பாபா

சத்யம் பொய்த்து தர்மம் பிழைத்து அதர்மம் கோலோச்சும் வேளை, நான் பூமியில் அவதாரம் செய்து பாதகர்களை அழித்து புண்ணியர்களைக் காப்பாற்றுவேன். இது கிருஸ்ணபரமாத்மாவின் அருள்வாக்கு. இவ்வாக்கியத்தின் உண்மையினை நாம் எள்ளளவும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் இவ் உண்மை நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. பட்டம், பதவி, பணம் உள்ளவர்கள் தாம் நினைத் தபடி நடந்து கொள்ளலாம். தட்டிக்கேட்க இயலாதவன் வீட்டில் புகுந்து எதையும் செய்யலாம். தட்டிப்பறிப்பு, கப்பம், கோரக்கொலைகள் எதுவேண்டுமானாலும். இறைவா! மனிதம் என்னும் உருவில் மிருகம் ஒன்று விநோத உடை அணிந்து நிற்கின்றதா? கற்றவரும் மற்றவரும் செய்யும் இப் பாதகம் நின் கண்களைப் பூசவில்லையா? காடரியும் வேளை அகிலும் சந்தனமும் சேர்ந் தெரிகிறதே. இவ்வேளையே இறைவன் மனித அவதாரம் தாங்குகிறான்.

இறைவணக்கம் பகட்டுக்காக செய்யப்படும் கருமமாகி விட்டது. இறைவணக்கத்தின் கருப்பொருள் என இறைவனை நாம் ஏமாற்றுகிறோம். பொங்கல் செய்கிறோம். பூசைகள் செய்கின்றோம். ஆனால் இறையருள் ஏன் கிட்டவில்லை. துன்ப துயரங்கள் தொடர்கின்றன. இங்கே தான் ஓர் உண்மை புலப்படுகிறது. இறைவழியில் தவறு விடுகிறோம் என்பதே அவ் உண்மையாகும்.

தன்னலம் கருதாத பொது நலம் இல்லை என்றே சொல்லலாம் பக்கத்து வீடு பற்றி எரியும் போது அயலவன் ஓடி வந்து அணைப்பது சுய நலமும் காரணமாகும். பகவான் அருளுகின்றார் அவ்வாறாவது பிறருக்கு சேவை செய். பெரியோரை தலை குனிந்து வணங்கினால் போதது. உள்ளமும் குனிதல் வேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும் அது கடவுளின்பணி என்றே கொள்ளவேண்டும். மூச்சு விடுவது கூட உள் மூச்சு, வெளி மூச்சு இதுவும் ஆன்மீக சாதனைதான். மூச்சை உள்ளிழுக்கும்போது ஷோ என்ற ஒலியும் வெளிவிடும்போது ஹம் என்ற ஒலியும் காணப்படுகிறது. ஸோ என்பது தெய்வீகத்தையும் ஹம் என்பது அகங்காரத்தையும் குறிகின்றது. ஸோஹம் என்பது நல்லதை உள்ளிழுத்து தீயதை வெளித் தள்ள வேண்டும் என் பதை உணர்த்துகிறது. இவ்வாறு பார்க்கில் சுகாதார சான்றின்படி நாம் ஒரு நாளைக்கு 21ஆயிரத்து 600 தடவை சுவாசிக்கின்றோம். அதன்படி ஒரு நாளைக்கு 21ஆயிரத்து 600கடவுள் நீ தான் என உணர்த்துகின்றது. ஆனால் நாம் அதனை ஏற்கத் தயார் இல்லை. இவ் உண்மையைப் புரிந்து கொள்ளத்தான் கடவுள் இவ் உடலைத் தந்திருக்கிறான். பூசையுடன் கடவுள் வணக்கத்தை நிறுத்திவிடாதே. கடவுள் உன் உயிர் மூச்சு.



ஜெய்சாயிராம்

யாதவன்

# பிரபாகரனை எவ்வாறு பிடிக்கப் போகின்றீர்கள்

## சபையில் ஐ.தே.க.எம்.பி கேள்வி

படையினர், பிரபாகரனை தப்பிச் செல்ல முடியாத அளவில் சுற்றிவளைத்துள்ளனர் என்று பிரதமர் கூறுகின்றார். அவரை எவ்வாறு பிடிக்கப் போகின்றீர்கள் என்று ஐ.தே.க. எம்.பியான ஜோசப் மைக்கல் பெரேரா கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சி தரப்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில், பிரபாகரன் தப்பிச் செல்ல முடியாது. எமது படையினர் அவரைச் சுற்றி வளைத்துள்ளனரென பிரதமர் கூறுகிறார். இவரை உயிருடன் பிடிப்பதா அல்லது எவ்வாறு பிடிக்கப் போகின்றீர்கள்?

இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்க பல அமைப்புகள் செல்லுகின்றன. இதேபோன்று ஐ.தே.கட்சிக்கும் அனுமதி வழங்கவேண்டும்.

தற்போது மக்கள் கொல்லப்படுகின்றார்கள், இம்சிக்கப்படுகிறார்களென பிழையான செய்திகள் வெளியாகின்றன. வெளிநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகள், பொது மக்கள் தொடர்பிலேயே பேசினார்கள்.

இங்கு வரும் வெளிநாடடுப் பிரதிநிதிகள் இங்குவந்து முகாம்களைப் பார்வையிட்டு, அவர்களது நாடுகளுக்குச் சென்றதும் பிழையான தகவல்களை வெளியிடுவதாக பிரதமர் தெரிவித்தார். எனவே, இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கத்தால் உதவ முடியாததன் காரணமாகவா அமைப்புகள் பொருட்களை சேகரிக்கின்றன.

தமிழ் மக்களை சிறைக் கைதிகளாக அடைத்து வைக்காமல் அவர்களது சொந்தங்களுடன் தொடர்புகொள்ள உதவவேண்டும். சுதந்திரத்தை வழங்கவேண்டும்.

அகதிமுகாம்களை படையினரிடம் ஒப்படைக்க வேண்டாம். அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். வன்னியில் சிக்கியுள்ள மக்கள் எவ்வளவு? இடம்பெயர்ந்து வாழும் தொகை எவ்வளவு என்பதை அரசாங்கம் வெளியிட வேண்டும். அதிக முகாம்களுக்குள் படையினரின் முகாம்களை அகற்றவேண்டும் என்றார். (ஓ-6)

# வன்னி மக்களுக்கு உணவு வழங்குவதற்கு அமெரிக்கா முன்னின்று செயற்பட வேண்டும்

## வன்னி சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)

மனிதாபிமானம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் உண்டு என்றால் தற்போதாவது, தாமதிக்காது வன்னி மக்களுக்கு நேரத்தை வீணாக்காமல், உணவுப் பொதிகளை வழங்க வேண்டும் என வன்னியில் உள்ள சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் அமெரிக்கா முன்னின்று செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

வன்னியில் உள்ள மனிதாபிமானப் பிரச்சினைகளை உணர்ந்து அமெரிக்காவும் உலக நாடுகளும் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என அந்தக் கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கைப் படை விமானங்கள், நேற்று முன்தினம் பாதுகாப்பு வலயத்தில் பல தடவைகளாக குண்டுகளைப் போட்டு பலரைக் கொன்றுள்ளன. முள்ளிவாய்க்கால் பகுதியில் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களினால் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் காயமடைந்த பொதுமக்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்றும் தாக்குதலிற்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவை பற்றிய முழுமையான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இதற்கிடையில் காயங்களுக்கு உள்ளானவர்களை ஏற்றிச் செல்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் நேற்று வரும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் யுத்தத்திற்கு உதவிவரும் இந்தியா, இந்த மே மாதம் நடுப்பகுதிக்குள் இலங்கையின் யுத்தத்தில் முக்கிய கட்டம் ஒன்றை அடைவதற்கான நடவடிக்கைகளை வலியுறுத்தி வருவதாக வன்னித் தரப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதில் ஒரு கட்டமே மக்களை பட்டினியில் வாழ வைப்பது என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# 50 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு — சர்வதேச நாடுகள் இணக்கம் —

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இடம்பெயர் மக்களைப் பராமரிப்பது தொடர்பில் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று இடர்முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி மேலும் ஒரு சில தினங்களில் இலங்கைக்கு கிடைத்துவிடும். சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கவேண்டும் என்ற எமது கோரிக்கை சாத்தியமான நிலையை தோற்றுவித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட உதவி வழங்குவது தொடர்பான மாநாடு ஒன்று கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது எவ்வளவு தொகை நிதி இலங்கைக்கு கிடைத்தது? மற்றும் மாநாட்டின் பிரதி பலன் என்ன? என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஓ-6)


அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்

மஹோற்சவம்

09 ஆம் நாள் தேர்த்திருவிழா (07.05.2009)

வெண்பா

பூரணன் அற்புதப் புதுமைப் பேரெழிலான்
பார்த்தனன் மருகனாம் பாலகணன் –தேர்வலம்
வரும் வேளையதில் வளமோங்கு நலந்தருவான்
மருவுவார் மனம் மேவி

எண்சீர்

சஞ்சலந் தீர்த்திடும் சங்கடகரனே
சர்வ லோகத்து முன்னவனே
அஞ்சுபகை அவலங்கள் அழித்தெமக்கு
ஆறுதலைத் தந்தருள்வாய் ஆலடியானே
கஞ்சிகையில் ஏறிவரும் ஏரம்பா
ஏற்றவரம் எமக்கருள்வாய் எக்கணமும்
பிஞ்சுமனப் பிள்ளையென்று போற்றியிங்கு
பாதார விந்தமதில் தஞ்சமுற்றோம்



–அல்வாயூர் சி.சிவநேசன்

(2566)


## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற யாழ்.கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -26.04.2009

### புனித பத்திரிசியார் கல்லூரி




462




463

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி




466




467

# ரோகித் சர்மா சகலதுறையிலும் ஜொலிப்பு டெக்கான் சார்ஜர்ஸ் அணி அபார வெற்றி

## மும்பை இந்தியன்ஸ் அணி ஏமாற்றம்

(செஞ்சூரியன்)

ரோகித் சர்மாவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன்பிரிமியர்லீக்(ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று செஞ்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 32 ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 36 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் 17 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 28 ஓட்டங்களையும் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் 25, ரி.எஸ். சுமன் 20, டரன் சிமித் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மலிங்க, குல்கர்னி, பிராவோ, ராஜீ மற்றும் ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 146 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்மை இந்தியன்ஸ் அணி ஆர்.பி.சிங், றோகித்சர்மாவின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.



இதில் டுமினி 48 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் ஷா 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் பிராவோ 13, ராஜி அட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ரோகித் சர்மா 2 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை சாய்த்ததுடன் நாயர், ஹர்பஜன் சிங், டுமினி ஆகியோரை தொடர்ந்து 3 பந்துகளில் வீழ்த்தி ஹட்ரிக் சாதனையைப் படைத்தார்.

அத்துடன் ஆர்.பி.சிங், ரி.எஸ். சுமன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த ரோகித் சர்மா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி, தான் விளையாடிய 8ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 8ஆவது போட்டியில் சந்தித்த 4 ஆவது தோல்வி இதுவாகும்.

## டில்லி கில்லி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் 32 ஆவது போட்டிவரை டில்லி டேர் டேவில்ஸ் அணி ஓட்ட விகித சராசரி மூலம் முதல் இடத்தில் உள்ளது. புள்ளிகள் அடிப்படையில் அணிகளின் விபரம் வருமாறு;

| அணிகள் | போட்டிகள் | வெற்ற | தோல்வ | சமநிலை | முடிபு இல்லை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| டில்லி டேர்டேவில்ஸ் | 7 | 5 | 2 | 0 | 0 | 10 | +0.158 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 8 | 5 | 3 | 0 | 0 | 10 | +0.152 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 8 | 4 | 3 | 0 | 1 | 9 | +1.361 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 8 | 4 | 3 | 0 | 1 | 9 | -0.317 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.200 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.501 |
| மும்பை இந்தியன்ஸ் | 8 | 3 | 4 | 0 | 1 | 7 | +0.516 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 9 | 1 | 7 | 0 | 1 | 3 | -1.097 |

## இருபது-20 உலகக் கிண்ணம்; ஆஸி. அணியில் பிரெட் லீ

(மெல்பேர்ன்)

இருபது-20 உலகக் கோப்பை தொடருக்கான "அவுஸ்திரேலிய அணியில் வேகப்புயல் பிரெட் லீ மீண்டும் இடம் பிடித்துள்ளார்.

இரண்டாவது இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்க உள்ள 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதில் அணித்தலைவராக ரிக்கி பொண்டிங்கும், துணைத்தலைவராக மைக்கெல் கிளார்க்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கணுக்கால் காயம் காரணமாக சமீப காலமாக அவதிப்பட்டு வந்த வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ மீண்டும் அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

சர்ச்சை நாயகன் சைமண்ட்ஸ் தனது இடத்தை உறுதி செய்துள்ளார்.

15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி வருமாறு;

ரிக்கி பொண்டிங் (அணித் தலைவர்), மைக்கெல் கிளார்க் (துணைத் தலைவர்), பிரட் ஹடின் (விக்கெட் காப்பாளர்), மைக்கெல் ஹசி, டேவிட் ஹசி, சைமண்ட்ஸ்,

டேவிட் வோர் னர், ஷேன் வோட்ஷன், நதன் பிரக்கன், நதன் ஹரிட்ஸ், ஹில்பென் ஹயூஸ், ஜேம்ஸ் ஹேறாப்ஸ், ஜோன்ஸன், பிரெட் லீ மற்றும் பீற்றர்சிடில்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 77





கே.சி.ஏ. சென்ரனறி சுற்றுத் தொடரின் 3ஆவது போட்டியில் இலங்கை அணி தென்னாபிரிக்க அணியை சந்தித்தது.

1996ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முரளிதரனின் மாஜயால சுழலிற்கு ஈடு கொடுக்க முடியாமல் 42 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சிறப்பாக பந்துவீசிய முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 35 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஜொன்டி ரோட்ஸ் (07), அணித்தலைவர் குரோன்ஜே (15), பி.எஸ். டிவில்லியர்ஸ் (05), டொனால்ட் (0). ஆகியோரை அரங்கு திருப்பி 4 விக்கெட்டுக்களை சாய்த்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 170 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றது. இந்நிலையில் தொடரில் முதலிரண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற இலங்கை அணி மூன்றாவது போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் மோதியது.

1996ஆம் ஆண்டு ஒக்டோபர் 4ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பைத் தீர்மானித் தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 371 ஓட்டங்களைக் குவித்தது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 73 ஓட்டங்களைக் கொடுத்து சயிட் அன்வர் (115), ரமேஷ் ராஜா (07) ஆகியோரை ஆட்டமிழப்புச் செய்து 2 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்.


பாலா

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் 289 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இறுதி போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இதில் முரளிதரன் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இத் தொடரில் 3 போட்டிகளில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி முரளிதரன் வெளிநாட்டில் நடைபெற்ற ஒரு நாள் தொடரில் தடம் பதித்தார்.

*(பயணிக்கும்)*

## எண் விளையாட்டு-73



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக் கப்பட்டுள் ளது.

நேற்றுமுன்தினப் பகுதிக்கான விடை



1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

# மோதல் பகுதிகளில் மக்கள் பட்டினி; உணவு அனுப்ப புலிகள் கோரிக்கை!

(கொழும்பு)

வட பகுதியில் மோதல்கள் நடைபெறும் பகுதியிலுள்ள மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பட்டினியைப் போக்குவதற்கு உடனடியாக கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட பகுதியில்தொடரும் மோதல்களால் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் வருவதுடன், பட்டினியால் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மனித நேயப் பணியாளர்களையும், உணவுப் பொருள்களையும் அனுப்புமாறு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஏ.பி.செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில தினங்களில் இந்தப் பகுதியில் 9 பேர் பட்டினியால் கொல்லப்பட்டுள்ளனர். எதிர்வரும் நாட்களில் மேலும் பலர் கொல்லப்படும் அபாயம் உள்ளது என நடேசன், ஐ.நா. செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதியொன்று தமக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஏ.பி.செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

மோதல் பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பாமல் இலங்கை அரசாங்கம் தடுத்து வைத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(ச-5)

## எம்.பிக்கள்...

பேரில் நேற்று நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தேசிய விடுதலை முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க நேற்று முன்தினம் கம்பஹா அத்தனகல நீதிமன்றில் சரணடைந்திருக்கிறார்.

அண்மையில் ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இவரும் ஏனைய ஐந்து நபர்களும் தேடப்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5,14)

## தயா மாஸ்டருக்கு...

வழங்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களுடன் நெருக்கமுடைய நபர்களை அரசியல் தலைவர்களாக நியமிப்பதன் மூலம் தேர்தல்களில் வெற்றி பெற முடியும் என அரசாங்கம் கருதுவதாகவும், இதன் காரணமாக தயா மாஸ்டரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தயா மாஸ்டரை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதன் மூலம் எஞ்சியுள்ள தமிமீழ விடுதலைப் புலிப் போராளிகளை சரணடையத் தூண்ட முடியும் என அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறெனினும் தயா மாஸ்டர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க வேண்டுமானால் ஆளும் கட்சி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலக வேண்டுமெனவும், இவ்வாறு பதவி விலகும் நபருக்கு பெருந் தொகையான பணமும் ஏனைய சலுகைகளையும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ச-5)

## மனித உரிமைகள் கண்...

சமூகத்தின் முன்பாக இலங்கை தொடர்பில் 45 பக்க அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததாகவும், இந்த அறிக்கையை அடுத்தே அவர் மீது சீற்றமடைந்த இலங்கை அரசு,அவர் எதிர்காலத்தில் நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகளுக்கான விசாவைப் பெற்றுக்கொண்டு கொழும்பு வந்து, அங்கிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அரச சார்பற்ற அமைப்புக்களின் ஆதரவுடன் வவுனியா சென்று தவறான தகவல்களை இவர் சேகரித்திருப்பதாக தகவல்கள் கிடைத்திருப்பதையடுத்தே எதிர்காலத்தில் அவரது வருகை தடை செய்யப்பட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

தன்னை ஒரு சட்டத்தரணி எனக் கூறி குடிவரவு அதிகாரிகளை ஏமாற்றி விட்டே இவர் கொழும்பு வந்ததாகவும் இலங்கை யின் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

அனா நெய்ஸ்டற், மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் என திவயின பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இவர் கண்காணிப்பகத்தின் ஒரு மூத்த ஆய்வாளர் என அந்த அமைப்பின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகள் விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்ற இவர், நெருக்கடியான காலகட்டங்களில் மனித உரிமை மீறப்படுவது தொடர்பில் புலனாய்வு செய்து அவற்றை அம்பலமாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்திருந்தார். (ச-5)

## இலங்கை அரசின்...

கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ள இலங்கைக்கான ஐ.நாவின் தூதுவர் நெயில் பூனே, பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து அந்த நேரத்தில் வெளியேறிய மக்களின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கு ஐ.நாவுக்கு உதவுமாறும் யுனோ சற் நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு அனுப்பியிருக்கும் விரிவான கடிதத்தில் ஐ.நா. தூதுவர் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது,

இந்தப் படங்கள் இரகசியமாகப் பெறப்படவில்லை. இந்தத் தகவல்கள் அரசாங்க அதிகாரிகளுடனும், உங்களுடனும், உங்களுடைய ஏனைய அமைச்சரவைச் சகாக்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளருக்கும் பாதுகாப்பு வலயத்தின் மிகவும் விரிவான ஒளிப்படங்கள் அவரது அலுவலகத்தில் வைத்து மார்ச்சிலும் ஏப்ரல் முதலாம் திகதியும் காண்பிக்கப்பட்டது.

அவருடைய வேண்டுகோளின்படி மூன்று மீற்றர் நீளமான கடதாசி ஒன்றுடன் நான் சென்றிருந்தேன்.

பொதுவாக யாரும் பார்க்கக் கூடிய வகையிலேயே இந்த ஒளிப்படங்கள் யுனோ சற் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்தேன். அந்தச் சந்திப்பிலும் மற்றைய சந்திப்புக்களிலும் இது தொடர்பான மேலதிக ஒளிப்படங்கள் அரசாங்கத்துக்குத் தேவை எனில் அவற்றை வழங்குவதற்கும் நான் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தேன் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

குறிப்பிட்ட செய்மதி ஒளிப்படங்களை ஐ.நா. சபை இரகசியமாகப் பெற்றுக்கொண்டதாகவும், இலங்கையில் உளவு பார்க்கும் நடவடிக்கைகளில் ஐ.நா. ஈடுபட்டிருப்பதாகவும் அரசாங்கம் முன்னர் ஐ.நா. சபை மீது குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தது.

இந்நிலையிலேயே கொழும்புக்கான ஐ.நா. தூதுவர் தனது நிலையை விளக்கி விரிவான இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றார். (எ-5)

## யுத்த நிறுத்தம் குறித்து...

அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரிடம் விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் அப்பாவி பொதுமக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கி வருவதாகவும் உடனடியாக யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பிக்க முடியும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், ஸ்ரீ ரவிசங்கரிடம் தொலைபேசி மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

சமாதான முன்னெடுப்புக்களுக்கு மத்தியஸ்தம் வகிக்க தயார் என ஸ்ரீ ரவிசங்கர் ஏற்கனவே அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்து அல்லலுறும் இலங்கை தமிழர்களுக்கு இந்தியா போதியளவு உதவிகளை வழங்கவில்லை என ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச-5)

## யுத்தம் தொட...

தாக்குதல் நடத்துமாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார கூறியதாக பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகியுள்ளமை குறித்து சுட்டிக்காட்டினார்.

இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில் யுத்தம் தொடர்பான செய்திகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது தமது ஆலோசனையின்றி அதை உறுப்பினர்கள் வெளியிடக் கூடாது எனவும் அதேவேளை கடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பாலித ரங்கே பண்டார கருத்து வெளியிடுகையில், கனரக ஆயுதங்களைக் கொண்டு பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு அவர் கூறவில்லை எனவும் விளக்கியுள்ளார். (ச-5)

## பஸ் மோதி...

ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோதே இவ் அனர்த்தம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் இவர் வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-14,30)

## ஈழ உணர்வாளர்...

செய்யப்பட்டிருந்தது. எனினும் உடல்நலக் குறைவு காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவர் இல்லாது பிரசாரம் மேற்கொள்ள விரும்பாத நிலையிலேயே சோனியா காந்தியின் சென்னை மற்றும் புதுவைக் கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என நேற்றுக் காலை காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

ஆனால் தமிழ் இன உணர்வாளர்கள் பலர் சென்னையில் குவிந்திருப்பதாகவும் இலங்கை பிரச்சினையில் மத்திய அரசின் அணுகுமுறைக்கு அவர்கள் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வரும் நிலையில் பலத்த பாதுகாப்பையும் மீறி அவர்கள் சோனியா காந்தியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் போன்ற நிகழ்வுகளில் ஈடுபடக் கூடும் என அஞ்சப்பட்ட நிலையிலேயே சென்னைக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டதாக தமிழகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(ச-5)

## மோதல் பகுதியில்...

சந்தித்துள்ளனர்.

இவ்விஜயம் குறித்துதெரிவித்த இக்குழுவின் தலைவரான டெஸ் பிறவுண், தாங்கள் இலங்கைக்கு செல்லும் முன்னர் எந்த விதமான முன் அனுமானங்களுடனும் செல்லவில்லை என்றும் அங்கு சென்றுள்ள தாங்கள் அங்கு நடைபெறும் மோதல்கள் மற்றும் நிலவி வரும் மனிதாபிமான நிலைமைகள் குறித்து இலங்கை அரசுடன் விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

இன்னமும் போர்ப் பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்கள் மிகவும் பயங்கரமான நிலையில் வாழ்ந்து வருவதாகவும் டெஸ் பிறவுண் தெரிவித்துள்ளார். போர்ப் பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்களை விடுவிக்க தொடர்ந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளை விடுதலைப் புலிகள் புறக்கணித்து வருகிறார்கள்.

அதே போன்று அங்கு நடைபெறும் மோதல் நடவடிக்கைகளில் இலங்கை அரசு அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற அறிவிப்பை இலங்கை அரசு உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் மோதல்கள் நடக்கும் பகுதிகளிற்கு ஐ.நா. குழு சென்று அங்கு தேவைப்படும் மனிதாபிமான தேவைகள் குறித்து ஆராய இலங்கை அரசு அனுமதித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

வவுனியாவில்இடைத்தங்கல் முகாம்களிற்கு சென்றிருந்த இக்குழுவினர் இங்கு சென்று பலரைச் சந்தித்து உரையாடியதில் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து வெளியேறி முகாம்களில் பாதுகாப்பான நிலையில் தாங்கள் தங்கியுள்ளதாக அந்த முகாமில் உள்ளவர்கள் கூறியதில் யதார்த்தமான உண்மை இருப்பதாகவே தாங்கள் உணருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த முகாம்களில் உள்ளவர்கள் தங்களிற்கு மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் தங்களிடம் வெளிப்படுத்தியதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச-14)

## இலங்கைக்கு விஜயம்...

நேற்று முன்தினம் மாலை ஐ.நா. செயலாளர் நாயகம், ஜனாதிபதியைத் தொடர்பு கொண்டு தற்போதைய நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடியதாகவும், இதன்போதே ஜனாதிபதி இந்த அழைப்பினை விடுத்ததாகவும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தலைமைச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து மோதல்கள் இடம்பெறும் பகுதிகளிலிருந்து அண்மைக் காலங்களில் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ள மக்களின் தற்போதைய நிலை குறித்தும், அவர்களைத் தங்க வைக்கவும் அவர்களது நலன்களைக் கவனிக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் மீள்குடியேற்றும் திட்டங்கள் குறித்தும் நேரடியாகவே கண்டுகொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி இந்த தொலைபேசி உரையாடலின்போது கேட்டுக் கொண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விஜயமானது புலிகளினால் தம் வசம் குறுகிவரும் நிலப்பரப்பில் இன்னமும் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் சிவிலியன்கள் குறித்த நிலைப்பாட்டினையும் சரியான முறையில் கணித்துக் கொள்ள உதவியாக இருக்குமென்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும் பான் கீ மூனின் விஜயம் எப்போது அமையும் என்பது குறித்து உடன்பாடு காணப்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை மனிதாபிமான அடிப்படையிலான போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும் அதன் மூலமாகவே அவசரமாகத் தேவையாகவிருக்கும் உதவிகள், குறிப்பாக உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அப்பகுதிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கேட்டுள்ளார்.

இவ்வாறு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமாகவே ஐ.நா. சபையால் அந்தப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை சரியான முறையில் மதிப்பிடக் கூடியதாக இருக்கும் எனவும் குறிப்பிட்ட ஐ.நா. செயலாளர் நாயகம், அதன் மூலமாகவே உயிர்களைக் காப்பாற்ற முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்கள் ஆபத்தான நிலையில் உள்ள அந்தப் பகுதி மீது ஆட்லறி மற்றும் கனரக ஆயுதங்களின் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளை நான் கேட்டுக்கொண்டேன்.

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வெளியே செல்வதற்கு அனுமதிக்குமாறும் கட்டாய ஆட்சேர்ப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் விடுதலைப் புலிகள் அமைப்பை நான் கேட்டுக்கொண்டேன்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வைக் கொண்டுவர வேண்டிய அவசரத் தேவை இரண்டு தரப்பினருக்கும் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என ஐ.நா. செயலாளர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (ச-5,14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.